அறைவு 02 இயம் 30 March 08 - 14, 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

விலை : 30.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்

## தர்ம அடி

புகைத்துக் கொண்டிருந்த வெண்சுருட்டை பாடசாலை மாணவியின் சீருடைக்குள் எறிந்து கதாநாயகத்தனம் காட்டிய வாலிபனொருவனுக்கு மக்கள் தர்ம அடி கொடுத்துள்ளனர்.

திருகோணமலை பெரியவெளி மல்லிகைத்தீவு பிரதேசத்தில் இச் சம்பவம் கடந்த வாரம் நடைபெற்றுள்ளது.

அதைத்தொடர்ந்த இராணுவத்தால் அவர் கூட்டிச்செல்லப்பட்டுள்ளார் என அப்பிரதேச மக்கள் தெரிவித்தனர்.





# கிழக்கில் ஆட்சி மாறுமா?

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சனாதிபதிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கும் இடையே நடைபெற்ற வாதப்பிரதி வாதங்களின் போது சனாதிபதி "அரச பங்காளி நிலையிலிருந்து வெளியே போ" எனப் பேசியதாக அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து எழுந்துள்ள நிலைகள் தொடர்பாக ஆராய்வதற்காக முஸ்லிம் காங்கிரஸ் தனது மத்திய குழுவைக் கூட்டவுள்ளது என நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

மத்திய அரசில் இருந்து முஸ்லிம் காங்கிரஸ் வெளியேறுமானால் கிழக்கில் கோலோச்சும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கூட்டணிக்கிடையே பிளவு ஏற்பட்டுவிடும்.

அதற்கும் மேலதிகமாக, கிழக்கின் மாகாண முதல்வர் பதவியை வெறும் இரண்டரை வருடங்களுக்கு மட்டுமே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு விட்டுக் கொடுத்திருப்பதாக கூறிய முஸ்லிம் காங்கிரஸ்.... 13

## ஒப்புதல் வாக்குமூலம்?



யுத்தத்தின் போது மனித உரிமைகள் மீறல் நடந்தமை உறுதிப்படுத்தப்பட்டால் அதற்காக மின்சாரக் கதிரைக்கு அனுப்பப்பட வேண்டியவர் நானே என முன்னாள் இலங்கையின் இராணுவத்தளபதி அறிவித்துள்ளார். யுத்தக்களத்தில் யாராவது ஒருவரின் பொறுப்பிலேயே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவர்கள் கொழும்பில் கதிரையில் குந்தியிருக்கும் அரசியல்வாதிகளாக இருக்க முடியாது. அதனைக் களத்தில் இருப்பவரே பொறுப்பேற்க வேண்டும். ஆகவே போர்குற்றச்சாட்டுக்களுக்காக மரணதண்டனையை ஏற்றுக்கொள்ள மின்சாரக் கதிரைக்கு யாராவது செல்ல வேண்டியிருந்தால் அது நானாகவே இருப்பேன். ஏனெனில் நானே தலைமைதாங்கினேன், நானே திட்டமிட்டேன்,....... 13

## பாரதிபுரம் கடைகள் உடைப்பு

### பின்னணியில் யார்?

மூதூர் பாரதிபுரம் கிராமத்தில் கடந்த சில நாட்களாக கடைகள் உடைக்கப்பட்டுக் கொள்ளை முயற்சிகள் நிகழ்ந்ததை அடுத்து அங்குள்ள மக்கள் இனந் தெரியாத பீதிக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இன்றைய திகதிவரை உடைக்கப்பட்ட கடைகளுள் மூன்று கடைகள் தமிழருக்குச் சொந்தமானவையாகவும் ஒருகடை முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமானதாகவும் உள்ளதாக தெரிகின்றது. உடைக்கப்பட்ட...... 13

## கட்டுவலைக்கு அனுமதி ஆனால் கட்டாந்தரையில் மீள்குடியேற்றம்


சம்பூர் மக்களின் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி யாழ்.அரச செயலகத்திற்கு முன்னால் உண்ணாவிரதப் போரில் -முத்தையாபிள்ளை தம்பிராசா-

"சாவதைதத் தவிர வேறு வழியில்லை" என மலைமுரசின் ஊடாகக் குரல் எழுப்பிய சம்பூர் மக்களின் கட்டுவலைப் பிரச்சனைக்குத் தீர்வு காணப் பட்டுள்ளதாக சம்பூர் மீனவர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

எனினும் கடந்த 04.03.2014 அன்று முகாமிலுள்ள சம்பூர் மக்களை மீள் குடியேற்றத்திற்காக அழைத்துச் சென்று காட்டிய இடங்கள் வனாந்தரங்கள் என அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்த போது "கடந்த 4ம் திகதி இராணுவப் பேருந்துகளில் மூதூர் பிரதேசச் செயலக அலுவலர்களுடன்......... 13




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

# குடியேற்றமும்... மீள்குடியேற்றமும்...

குடியேற்றம் என்னும் சொல் தோன்றுதொட்டு வழக்கத்தில் நிலவிவரும் சொல்லாக இருக்கின்றது.

மக்கள் பெருக்கத்திற்கு ஏற்ப புதிய பிரதேசங்களைக் கண்டறிந்து அப்பிரதேசங்களில் தமது இருப்பைப் பலப்படுத்தும் செயற்பாடுகளே குடியேற்றங்கள் என அக்காலத்தில் கருதப்பட்டது.

பின்னர் குடியேற்றங்கள் என்ற பெயருடன் நிலங்களைக் கைப்பற்றும் செயற்பாடுகளை மனித இனம் மேற்கொள்ளத் தொடங்கியது.

வளம் பொருந்திய நிலத்தினைத் தமதாக்கிக்கொள்ள மனித இனம் தம்மிடையே போரைத் தொடுத்தது. அந்தப் போர் பிரதேசங்களைக் கைப்பற்றி, நாடுகளைக் கைப்பற்றி, பின்னர் கண்டங்களைக் கைப்பற்றி உலகைக் குடைகீழ் ஆட்சிகளில் கொண்டுவர முயற்சித்த நடவடிக்கையாகத் தொடர்ந்தது.

அதன் வெளிப்பாடே "சூரியன் மறையாத இராச்சியத்தை" ஒரு காலத்தில் பிரித்தானியாவிற்குப் பெற்றுத் தந்தது.

ஆனால் மனிதன் கூர்ப்படைந்த காலத்திற்குப் பின்னர் போர் தனது வடிவத்தை மாற்றிக் கொண்டது. நிலத்தையும் வளத்தையும் நேரடியாக ஆளுகை செய்யாமல் மறைக்கரங்கள் ஊடாக அந்நிலத்தையும் வளங்களையும் தமது ஆளுகைக்குள் கொண்டுவருவது நிகழ்ந்துகொண்டே இருக்கின்றது.

ஈழத்தில் வளம் பொருந்திய தமிழ் மக்களின் நிலங்களை அபிவிருத்தியென்றும் பாதுகாப்பு என்றும் கையகப்படுத்தியுள்ள அரசு அப் பிரதேசங்களில் இருந்து பலவந்தமாக மக்களை வெளியேற்றியுள்ளது. அதே வேளை வளம் பொருந்திய மண்ணும், மீன்பிடி கடற்படுக்கைகளையும் குடியேற்றம் என்னும் பெயரால் சிங்கள இன மக்களை குடியேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது.

இங்கு தான் குடியேற்றமும் - மீள் குடியேற்றமும் ஈழத்தில் இரு வேறு பொருள் கோடல்களைக் கொள்கின்றது.

வளம் மிக்க நிலத்தில் சிங்கள மக்களைக் வாழ வழிவகுப்பது குடியேற்றம் எனவும், வளமற்ற வனாந்தரங்களில் தமது வளம் மிக்க சொந்த நிலங்களில் இருந்து பாதுகாப்பின் பெயரிலும், அபிவிருத்தியின் பெயரிலும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட மக்களை வாழப் பலவந்தப்படுத்துவது மீள் குடியேற்றம் எனவும் இந்தத் தேசத்தில் அர்த்தம் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதனை நிருபிப்பதைப் போலவே கடந்த வாரம் சம்பூர் முகாமில் வாழும் மக்களை மீள்குடியேற்றம் செய்யப்போவதாக அழைத்துச் சென்று அரசதுறையினரும், படையினரும் காட்டிய இடங்கள் வனாந்தரங்களாக இருந்துள்ளதுடன், தண்ணீர் வசதியே இல்லாத சிறு காட்டுத் துண்டுகளாகவும் இருந்துள்ளது.

பலவந்தமாகத் துரத்தப்பட்ட மக்கள் தமது சொந்தப் பிரதேசங்களில் வீடுகளுடனும், போதிய வசதிகளுடனும், வாழ்ந்தவர்கள் என்பதை அரசு ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது என்பது எவருக்குமே புரியவில்லை.

ஆகக் குறைந்த பட்சம் மீள்குடியேற்றப்படும் இடங்களில் வாழ்விடங்களையோ, தண்ணீர் வசதிகளையோ, சுயதொழில் வாய்ப்புக்களையோ உருவாக்காமல் மக்களை அழைத்துச் சென்று குடியேற்ற முனைவது அம்மக்களை நட்டாற்றில் விடுவதாகப் போய்விடும்.

மக்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவித்து அவர்களின் வாழ்வில் மெல்லிய சுதந்திரக் காற்றை ஊடாடவிடுவதே இப்போதைய தமிழ் மக்களின் தேவையாக உள்ளது. தமிழ் மக்கள் அவ்வாறானதொரு சூழலைத்தான் கடந்த முப்பது வருடங்களாக இழந்திருந்தனர் என்பதை மறக்க முடியாது. போராளிகளின் காலத்தில் மக்கள் எவ்வாறிருந்தார்களோ அதே வாழ்வியலை வேறு வடிவத்தில் அரசு திணிக்கும் போது எவ்வாறு மக்கள் போரில் இருந்து தாம் விடுவிக்கப்பட்டுவிட்டதாக உணர்வார்கள்?

இன்றைய காலையில் தொழிலாளி ஒருவனுக்குத் தொழில் இருந்தால் இப்போதைக்குப் போதும்... இணக்கம் தானாகவே வரும்... புரிந்துகொள்ளுங்களேன்...!

# எழிலனின் வழக்கு 5வது தடவை ஒத்திவைப்பு



திருகோணமலை மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளராக செயற்பட்டு பின்னர் போரின் இறுதிக் கட்டத்தில் பாதுகாப்புப் படைகளிடம் சரணடைந்து காணாமற் போயுள்ள எழிலன் அவர்களின் வழக்கானது, ஐந்தாவது தடவையாகவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வவுனியா மேல் நீதிமன்றமானது, இக் காணாமற் போதல் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றுக்கு வழக்கைப் பாரப்படுத்தியுள்ளது. அதனைத் தொடர்ந்து 2009ம் ஆண்டில் இருந்து ஐந்தாவது தடவையாகவும் இவ்வழக்கானது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# சவூதியில் கிண்ணியா வாசி மரணம்

சவூதியில் கடமையாற்றி வந்த கிண்ணியாவாசியொருவர் அந்நாட்டிலேயே மரணம் அடைந்து அங்கேயே அவரது ஜனாசா நல்லடக்கமும் செய்யப்பட்டுள்ளது.

கிண்ணியா சம்மாவச்சத்தீவு கிராமத்தைச் சேர்ந்த வீ. மௌதூக் என்பரே இவ்வாறு உயிரிழந்தவராவர்.

இவர் சவூதி அரேபியாவில் பணி புரிந்து கொண்டிருந்த போது சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக தெரிவிக்கப் பட்டுள்ளது. அத்துடன் அவரது ஜனாஸா சவூதி அரேபியாவில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிராம சேவையாளராகத் தெரிவானவர் மரணம்

கிராமசேவையாளர் பரீட்சையில் தேர்வாகி நியமனக் கடிதம் பெறவிருந்த 24 வயதுடைய இளைஞன் ஒருவர் கிணற்றில் தவறி விழுந்து மரணம் ஆகியுள்ளார்.

அன்புவழிபுரம் முருகன் கோவிலடியைச் சேர்ந்த மகேந்திரன் மயூரன் என்ற இளைஞனே இவ்வாறு பலியாகியுள்ளார். கடந்த 5ம் திகதி தனக்குத் தலைசுற்றுவதாக கூறிய அவர் வீட்டில் படுத்துறங்கியுள்ளார். சிறிது நேரத்தின் பின்னர் முகம் கழுவுவதற்காக அவர் கிணற்றடிக்குச் சென்றுள்ளார். அப்போதே அவர் கிணற்றில் தவறி விழுந்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர். பகல் உணவு உண்பதற்காக மகனை தேடிப்பார்த்த வேளை கிணற்றில் வீழ்ந்து கிடப்பதை அவதானித்ததாகவும் வீட்டார்கள் குறிப்பிட்டனர்.

இவர் மரணமான அடுத்த நாள் கிராம சேவையாளர் நியமனத்தைப் பெறுவதற்காக கொழும்பு செல்லத் திட்டமிட்டிருந்ததாகவும் தெரிய வருகின்றது.

# புதைகுழி அகழ்வு நிறுத்தம்

மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் கடந்த 5ம் திகதியுடன்முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் 20ம் திகதி தொடக்கம் 33 தடவைகள் நீதிபதியின் முன்நிலையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் மூலம் 80 மனித உடல்களும் எச்சங்களும் மீட்கப்பட்டு தனியாகப் பெட்டிகளில் பொதி செய்யப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

தற்போது முடிவிற்குக் கொண்டு வரப்பட்டுள்ள இவ் அகழ்வுப்பணிகள் நிரந்தரமானதா அல்லது தற்காலிகமானதா? என்பது பற்றித் தெரியவரவில்லை.

# புலித்தலைவரின் பெண் யானை "மெனிக்கா"



இறுதி யுத்தத்தின் பின்னர் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட பெண் யானையானது தற்போது பின்னவல யானைகள் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

இந்த யானையானது விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களால் வளர்க்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அக்காலத்தில் இந்த யானைக்கு இடப்பட்ட பெயர் எது என எவருக்கும் தெரியாததால் தற்போது அந்த யானைக்கு மெனிக்கா எனப் பெயரிட்டுள்ளதாக அந்த யானையின் பராமரிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# யானை வேண்டுமா?

யானையொன்றைச் சொந்தமாக வைத்திருக்க விரும்புபவர்களுக்கான சட்ட ஏற்பாடுகளை உருவாக்குவதில் வனபரிபாலன அமைச்சர் ஈடுபட்டுள்ளார்.

அதன்படி ஒரு மில்லியன் ரூபாவை அனுமதிக்கட்டணமாகச் செலுத்தும், ஐந்து ஏக்கர் நிலத்தை தமக்குச் சொந்தமாக வைத்திருக்கும் எவரும் யானையொன்றைத்ம்முடையதாக வைத்திருக்க முடியும் எனத் தெரிகின்றது.

# குடிநீரின்றி அவதி

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கன்னியா மாங்காயூற்று மோசஸ் கிராம மக்கள் குடிப்பதற்கு குடிநீர் இன்றி அவதியுற்று வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆறு வருடங்களாக இக் கிராமத்தில் குடியமர்த்தப்பட்டும் குடிப்பதற்கு குடிநீர் வசதியினை செய்து தரவில்லை எனவும் அக்கிராம மக்கள் அரச அதிகாரிகளை குற்றம் சுமத்துகின்றனர்.

அறுபது குடும்பங்கள் வாழும் கிராமத்தில் ஒரு பொதுக்கிணறு மட்டுமே காணப்படுகின்றது. அக்கிணற்று நீர் உவர் நீராக காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தூர இடங்களுக்கு சென்று குடிநீரை பெற முடியாதவர்கள் அக்கிணற்று நீரையே, குடிப்பதற்கும் பயன்படுத்துவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

# பல பில்லியன் டொலர்களில் திருமலைத் துறைமுகம் அபிவிருத்தி

திருகோணமலை துறைமுகத்தை 4.5 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நவீன வசதிகளுடன் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப் பல பில்லியன் அபிவிருத்திக்கான சாத்திய வள ஆய்வினை மேற்கொள்ளவும், இடத்தைப் பார்வையிடுவதற்கு கிழக்கு மாகாண விவசாய, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடித்துறை மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான ஹாபிஸ் நசீர் அஹமட் தலைமையில் சவூதி அரேபிய தூதுக்குழு இன்று திருகோணமலைக்கு விஜயம் செய்து திருகோணமலை அஸ்ரப் இறங்குதுறையை பார்வையிட்டனர்.

சவூதி அரேபியாவின் சர்வதேச புகழ்பெற்ற கட்டிட நிர்மாண கம்பனியான சம்மோடி நிறுவனக் குழுவே இதனை பார்வையிட்டனர். இக்குழுவினர் சர்வதேச ரீதியில் புகழ் வாய்ந்த கட்டிடங்கள், உல்லாச விடுதிகள், துறைமுகங்கள், சவூதி அரேபிய மக்காவில் ஹரம் உட்பட பல்வேறு புகழ் வாய்ந்த கட்டிட நிர்மாணங்களை மேற்கொண்டுள்ளனர். தற்போது உலகிலேயே அதி உயரமாக கட்டடமாக பெயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தின் சமூக நல நடவடிக்கைகள்

கடந்த வாரம் கிழக்கில் இராணுவத்தினரின் சமூக நல நடவடிக்கைகள் சில பரவலாக நடைபெற்றுள்ளன.

களுவாஞ்சிக்குடியில் வயோதிப இல்லத்திற்கு உணவுப் பொதிகளை 23வது படையணி வழங்கியுள்ளது.

அத்துடன் திருக்கோவில் கயேசா முதியோர் இல்லத்திற்கு 12வது தேசிய பாதுகாப்புப் படைப்பிரிவு உணவுப் பொதிகளை வழங்கியுள்ளது.

கதிரவெளியில் உள்ள திலகவதியார் சிறுவர் இல்லத்திற்கும் 3வது தேசிய பாதுகாப்புப் படையணி உணவுப் பொதிகளை வழங்கியுள்ளது.

சேனையூர் பாடசாலையொன்றில் இசை நிகழ்ச்சியை 24 வது படையணி நிகழ்த்தியதுடன் இரத்ததான முகாம் ஒன்றையும் நடாத்தியுள்ளது.

மகாசிவராத்திரியை முன்னிட்டு சித்தாண்டி விநாயகர் கோவில், பிள்ளையார் கோவில் மற்றும் முருகன் கோவிலில் விசேட பூஜைகளையும் அவர்கள் நடாத்தியுள்ளனர்.

# ஆங்கிலப் பத்திரிகைகள் மீதான பார்வை

## காணாமற்போனோரின் உறவுகளுக்கு உதவப் புதிய சட்டம்

மரணச் சான்றிதழை ஏற்றுக் கொள்ளவிரும்பாத காணாமல் போனோரின் உறவினர்ளுக்கு "காணாமல் போயுள்ளார்" என்ற சான்றிதழை வழங்குவதற்கு ஏற்றவகையில் சட்ட ஏற்பாடொன்றைச் செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் இன்று வரை வழங்கப்படாத "காணாமல் போயுள்ளார்" என்ற சான்றிதழ் உலகின் பல நாடுகளில் பயன்பாட்டில் உள்ளது.

பெருமளவு மக்கள் ஒரு சேரக் காணாமல் போகும் போது அந்நாடுகளில் இவ்வகையான சான்றிதழே வழங்கப்படுகின்றது. இச்சான்றிதழ் மரணச் சான்றிதழுக்கு ஒப்பானதாகும். இவ்வகைச் சான்றிதழை இலங்கையில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரச எந்திரம்

## மத்தளவைக் கையேற்கும் மிகின்

மத்தள மகிந்த இராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தின் நிர்வாகத்தை மிகின் லங்கா பொறுப்பேற்றுள்ளது.

சிறிலங்கா எயர்லைன்ஸின் நிர்வாகத்தின் கீழிருந்த இவ்விமான நிலையத்தின் நிர்வாகச் செயற்பாடுகளை மிகின் லங்கா நிறுவனத்திடம் கையளிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாக வான்பரப்பு அதிகார சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி பண்டாரநாயக்கா சர்வதேச நிலையத்தில் நிலைப்படுத்தப்பட்டுள்ள மிகின் லங்காவின் நடவடிக்கைகள் யாவும் மத்தள விமான நிலையத்திற்கு மாற்றப்படும் என அவர் தெரிவித்தார்.

## 20,000 பசுக்கள் இறக்குமதி



இலங்கையில் ஏற்பட்டுள்ள பாலுக்கான தட்டுப்பாட்டை அடுத்து, சுமார் 20,000 பசு மாடுகளை இலங்கைக்கு இறக்குமதி செய்யும் நடவடிக்கையில் உரிய அதிகார நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. இலங்கையின் பால்த் தேவை வருடம் ஒன்றிற்கு 900 மில்லியன் லீற்றராக இருக்கின்றது. உள்நாட்டு உற்பத்தி 300 மில்லியன் லீற்றராக உள்ளது. இதைத் தொடர்ந்து, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முன்மொழிவிற்கமைய சுமார் 9.6 பில்லியன் ரூபா செலவில் இவ்விறக்குமதி

## பாக்குக் கொட்டைக் கடத்தலில் அமைச்சர்?

15 பாரிய கொள்கலன்களில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட பாக்குக் கொட்டைகளுக்குச் சுங்க வரியைச் செலுத்தாமல் வெளியேற்றுவதில் அமைச்சர் ஒருவர் அதீத அக்கறை கொண்டுள்ளதாக தெரிய வருகின்றது.

அவ்வாறு வெளியேற்றப்படுமாயின், சுமார் 120 மில்லியன் ரூபா வருமான இழப்பு ஏற்படுமென சுங்கத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இந்தோனேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள இப்பாக்குக் கொட்டைகள் பதப்படுத்தப்பட்டபின், மீள் ஏற்றுமதி செய்யப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இதேபோல முன்னர் ஒரு முறையும் சுங்கத் திணைக்களத்தின் வரிக்குட்படாமல், பாக்குக்கொட்டைகள் இலங்கைக்குள் எடுத்து வரப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது.

## வெளிநாடுகளுக்கு அலைய வேண்டாம் - டியூ

இலங்கைதமிழர்களுக்குத் தீர்வொன்றினைப் பெற்றுக் கொள்வதற்காக, வெளிநாடுகளுக்குப் பின்னே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலைவது பொருத்தமானது அல்ல, என சிரேட்ட அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

## இலங்கையின் அறிக்கை எங்கே?....

மனித உரிமை ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட நவநீதபிள்ளை அவர்களின் அறிக்கையுடன், ஏன் இலங்கை அரசினால் வழங்கப்பட்ட அறிக்கை இணைக்கப்படவில்லை என ஜெனிவாவிற்கான இலங்கையின் தூதுவர் கேள்வி எழுப்பியுள்ளார் என அமைச்சர் மகிந்த சமரசிங்க் தெரிவித்துள்ளார்.

## கால் மற்றும் வாய் நோய் பரவியது எவ்வாறு?

இலங்கையின் சில மாவட்டங்களில் உள்ள கால் நடைகளுக்கு, கால் மற்றும் வாய் நோயை ஏற்படுத்திய நோய்க் கிருமிகள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கால் நடை மருந்துகளினால் ஏற்பட்டதா? என ஆய்வு செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

உள்நாட்டு மருந்து வகைகளுக்குப் பதிலாக அண்மையில் வெளிநாட்டு மருந்து வகைகள் கால் நடைகளுக்குப் பாவிக்கப்பட்டன. உள்நாட்டு உற்பத்தி போதாமையினாலேயே வெளிநாட்டு உற்பத்திகளைப் பயன்படுத்தியதாக கால் நடை அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது. அம்மருந்து வகைகளில் இந்நோயைப் பரப்பும் கிருமிகள் இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்ததையடுத்தே, ஆய்விற்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

## கிழக்கு மாகாண நாடகப் போட்டி - மாகாணக் கலாசாரத் திணைக்கம் ஆதரவு

உலக நாடக தினத்தை முன்னிட்டு, இம்முறை கிழக்கு மாகாண கலாச்சாரத் திணைக்களத்தினால் திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் 27.03.2014 அன்று உலக நாடக தினம் சிறப்பிக்கப்படவுள்ளது.

இத்தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாணக் கலாச்சாரத் திணைக்களத்தினால் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கிடையேயான நாடகப் போட்டி நடைபெறவுள்ளது.

இப்போட்டி பாடசாலை மாணவர்களுக்கெனவும் திறந்த வயதினருக்கெனவும் என இரண்டு பிரிவுகளாகவும், திருகோணமலை, அம்பாறை மாவட்டத்தில் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும், மட்டக்களப்பில் தமிழ் மொழியிலும் நடைபெறும்.

இப்போட்டியானது, சமூக விடயங்களைக் கருப்பொருளாகவும், 15 பேர் உள்ளடங்களான குழுவாகவும், 20 நிமிடம் கொண்டமைந்ததாகவும் எதிர்பார்க்கப்படுகின்ற இந்நாடகப் போட்டியானது, 20.03.2014ம் திகதிக்கு முன்னர் இலங்கையின் புகழ்பெற்ற விரிவுரையாளர்களால் நடுநிலைமை வகிக்கப்பட்டு, அதில் தெரிவு செய்யப்படுகின்ற நாடகத்திற்கான விருதுகள், பரிசில்கள், சான்றிதழ்கள் போன்றன 27.03.2014 அன்று திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் சிறப்பிக்கப்படும் உலக நாடக விழாவிலே வழங்கப்படும் என்பதுடன், சிறந்த நடிகர், நடிகை, கதையாசிரியர், துணை நடிகர், துணை நடிகை, போன்ற பல விருதுகளும் வழங்கப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதில் தெரிவு செய்யப்படுகின்ற நாடகங்கள் தேசிய பாடசாலை நாடகத்திலும், தேசிய அரச நாடகவிழாவிலும் பங்கு பெறுவதற்கான வாய்ப்புக்களும், நல்லதொரு எதிர்காலமும் உண்டு என்பதுடன், "அபிவிருத்தியை மேம்படுத்துவதுடன், இளைஞர் யுவதிகளின் திறமைகளை வெளிக்கொணர்வதுமே" இதன் நோக்கமாகும் என கலாசாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது . தொடர்பு:

கலாச்சாரத் திணைக்களம், கிழக்கு மாகாணம், திருகோணமலை, தொ.பே: 026-2220036 (ஜெய்)

## ஈச்சந்தீவில் மகாசிவராத்திரி

ஈச்சந்தீவு விநாயகர் ஆலயத்தினால் மஹா சிவராத்திரி விழா 2014.02.27 அன்று இரவு 9.00 மணிக்கு கோயில் மண்டபத்தில் மிக விமர்சையாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கிண்ணியா பிரதேசச் செயலாளர் திரு பீ. கிருஸ்ணேந்திரன் அவர்களும் பிரதம விருந்தினர்களாக கிண்ணியா காவல் நிலையப் பொறுப்பதிகாரி திரு. அகில ரணசிங்க, கிண்ணியா ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலய அதிபர் திரு.மு. இராஜசேகர் அவர்களும் கலந்துகொண்டதுடன் கிராமத் தலைவர்களும், மக்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வை முன்னிட்டு நடாத்தப்பட்ட கலாசார போட்டி நிகழ்வுகளுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டது. அத்துடன் பிரதேச செயலாளர், காவல் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு ஆலய பரிபாலன சபையினரால் நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

(அ.மதன்)

## இடைநிறுத்தப்பட்டுள்ள சாக்கடையை சுத்தமாக்கிய நகரசபை

திருஞான சம்பந்தர் வீதியில் கட்டப்பட்டுவந்த வடிகானை அமைப்பதற்கு தற்காலிகத் தடை ஏற்பட்டுள்ளதை அடுத்து வடிகான் வேலைகளை வீதி அபிவிருத்தித் திணைக்களம் இடைநிறுத்தியுள்ளது. அதனால் சில வீடுகளுக்கு முன்னால் மட்டும் கட்டப்பட்டுள்ள கானில் கழிவு நீரானது செல்லத்





தொடங்கியதை அடுத்து அக் கழிவு நீர் வடிகானிலேயே தேங்கியுள்ளது.

அதையடுத்து ஏற்பட்ட பெரும் துர்நாற்றத்தை அடுத்து திருகோணமலை நகரசபை அக் கானைத் தற்காலிகமாக சுத்தமாக்கியுள்ளது. நுளம்புகள் பெருகும் அபாயம் இதனால் குறைந்துள்ளது என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

(அருணன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் என்ன செய்ய வேண்டும்?

-நிலாந்தன்-

தமிழர்கள் ஜெனிவாவில் ஒரு தரப்பாக இல்லைத்தான். ஆனால், தமிழர்களின் அரசியலை முன்னிறுத்தியே அந்த அரங்கு திறக்கப்பட்டுள்ளது. எனவே, தாம் ஒரு தரப்பாக இல்லாத ஓர் அரங்கில் தமது பேரம் பேசும் சக்தியைத் தமிழர்கள் உயர்த்திக்கொள்வது எப்படி? அல்லது தாம் ஒரு தரப்பாக இல்லாத ஒரு அரங்கில் ஏனைய சக்தி மிக்க தரப்புக்கள் தன்னை ஒரு பகடைக்காயாகப் பயன்படுத்தாத படிக்கு அரசியலை செய்வது எப்படி? அல்லது சக்திமிக்க நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்குள் தமது சொந்த நிகழ்ச்சி நிரலைக் கொண்டு போய் பொருத்துவது எப்படி?

உண்மையில் இக்கேள்விகள் தமிழ் டயஸ்பொறாவை நோக்கியே கேட்கப்படவேண்டும். ஏனெனில், ஜெனிவா அங்குதானிருக்கிறது. தவிர தற்பொழுது அதாவது மே 19இற்குப் பின்னர் தமிழ் இனமான அரசியலின் கூர்முனை போல தமிழ் டயஸ்பொறாவும் தமிழகமும் தான் காணப்படுகின்றன. தாய் தளத்தில் வாழும் தமிழர்கள் இங்கு நிலவும் அரசியல் சூழல் காரணமாக தமது மெய் விருப்பங்களை முழுமையாக வெளிப்படுத்தவியலாத ஒரு நிலையில் அஞ்சலோட்டக் கோலானது இப்பொழுது தமிழ் டயஸ்பொறா மற்றும் தமிழகத்தின் கைகளில் தான் இருப்பது போல ஒரு தோற்றம் உண்டாகியிருக்கிறது.

எனவே, ஜெனிவாவைக் கையாள்வது என்பது அதன் முதன் நிலை அர்த்தத்தில் டயஸ்பொறாவுக்குரிய ஒரு வேலைத்திட்டமாகவே தோன்றுகிறது.

ஆனால், இக்கட்டுரையானது தாய்தளத்திருந்தே எழுதப்படுகின்றது. எனவே, இங்கிருந்து கொண்டு டயஸ்பொறாவுக்கு புத்திமதி சொல்வதோ அல்லது கட்டளைகள் இடுவதோ அல்லது வகுப்பெடுப்பதோ பொருத்தமாயிருக்காது. அங்குள்ள கள யதார்த்தத்திற்கேற்ப அங்குள்ள தரப்புக்களே முடிவுகளை எடுக்க வேண்டும்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வீழ்ச்சிக்கு முன்பு, தாய் தளத்திலிருந்தே கட்டளைகள் வழங்கப்பட்டன. மையம் இங்குதானிருந்தது. ஆனால் இப்பொழுது மையம் கரைந்துவிட்டது. அல்லது இடம்மாறிவிட்டதுபோல ஒரு தோற்றம் உருவாகியிருக்கிறது. தாயகத்தில் மக்கள் ஆணையைப் பெற்றிருக்கும் கூட்டமைப்பானது தன்னை ஒரு மையமாகக் கட்டியெழுப்பத் தவறியதன் விளைவே இதுவெனலாம். தமிழகம், டயஸ்பொறா, தாய்த் தளம் ஆகிய மூன்றையும் உள்ளடக்கிய ஒரு உலகளாவிய ராஜிய வியூகம் வகுக்கப்படும்போதே தாய்த்தளம் அதன் இயல்பானது வளர்ச்சிப் போக்கில் ஒரு மையமாகக் கட்டியெழுப்பப்படும். இப்படிப் பார்த்தால் முடிவெடுக்க வேண்டியது தாய்த் தளத்தில் செயற்படும் எல்லாக் கட்சிகளும் தான்.

அதாவது, தாய்த்தளத்தை அதன் மெய்யான பொருளில் ஒரு மையமாகக் கட்டியெழுப்பவது எப்படி என்பதே இப்பொழுது தமிழர்கள் முன்னுலுள்ள மிகப் பெரிய கேள்வியாகும். அப்படித் தாய் தளத்தை ஒரு மையமாகக் கட்டியெழுப்புவதற்கு தமிழ் மக்கள் செய்ய வேண்டியவை எவையெவை?

இக்கேள்வியை மேலும் விரிவாக்கிக் கேட்கின், தமிழ் மக்கள் மத்தியில் உள்ள ஒவ்வொரு தரப்பும் செய்ய வேண்டியவை எவையெவை? என்று கேட்கலாம்.

எனவே, முதலில் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள தரப்புக்கள் எவையெவை என்று ஓரளவுக்கு பொதுமைப்படுத்தி அடையாளம் காண முயற்சிக்கலாம். அவை வருமாறு:

முதலாவது: அரசியல் கட்சிகளும், அரசியல்வாதிகளும்.

இரண்டாவது: சிவில் சமூகங்களும், செயற்பாட்டியக்கங்களும், மத நிறுவனங்களும்.

மூன்றாவது: அபிப்பிராயத்தை உருவாக்கவல்ல படிப்பாளிகளும், புத்திஜீவிகளும், ஆய்வாளர்களும், ஊடகங்களும், படைப்பாளிகளும்.

நாலாவது: உருவாக்கப்பட்ட அபிபிராயங்களின் பின் செல்லும் சாதாரண பொதுசனங்கள்

ஐந்தாவது: எந்த ஒரு அபிப்பிராயத்தின் பின்னும் செல்ல விரும்பாத அல்லது அரசியல் ஈடுபாடற்ற பொதுசனங்கள் இதில் முதலாவதாக - அரசியல்வாதிகள் என்ன செய்யவேண்டும்? ஒரே வரியில் சொன்னால் தமது வாக்காளர்களை அரசியல் மயப்படுத்த வேண்டும் எனலாம். கடந்த சுமார் ஆறு தசாப்த காலத்துக்கும் மேலாக இப்பிராந்தியத்தில் வேறெந்த மக்கள் கூட்டத்தோடும் ஒப்பிட முடியாத அளவுக்கு மிகக் கொழுத்த அரசியல் அனுபவத்தைப் பெற்ற மக்கள் ஈழத் தமிழர்கள்தான். ஆனால், இதில் உள்ள கொடுமையான முரண் எதுவெனில், எந்தளவுக்குக் கொழுத்த அரசியல் அனுபவத்தைப் பெற்ற மக்களாகத் தமிழர்கள் காணப்படுகின்றார்களோ அதேயளவுக்கு மிகக் குறைவாக அரசியல் மயப்படுத்தப்பட்ட மக்கள் கூட்டமாகவும் காணப்படுகின்றார்கள் என்பதே. அதாவது, மிகக் கொழுத்த அரசியல் அனுபவத்தைப் பெற்ற, ஆனால் மிகக் குறைந்தளவு அரசியல் மயப்படுத்தப்பட்ட ஒரு மக்கள் கூட்டம் என்று பொருள்.

இதற்குத் தமிழ் மக்கள் மத்தியில் வேலை செய்த, செய்கின்ற எல்லாக் கட்சிகளும், இயக்கங்களும் பொறுப்பேற்க வேண்டும். அவை மட்டுமல்ல, தமிழ் மக்கள் மத்தியில் செயற்பட்ட செயற்படுகின்ற எல்லாச் செயற்பாட்டாளர்களும், படிப்பாளிகளும், ஆய்வாளர்களும், படைப்பாளிகளும், ஊடகவியலாளர்களும் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.



போதியளவு அரசியல் மயப்படுத்தப்படாத மக்கள் எப்பொழுதும் உணர்ச்சிப் பெருக்கான கோ'ங்கள் வாக்குறுதிகளின் பின் இழுபடுகிறார்கள். வாக்கு வேட்டை அரசியல்வாதிகள் மக்களுடைய மறதியின் மீது தமது கட்சிகளைக் கட்டியெழுப்புகின்றார்கள். அந்த மக்களிடம் பெற்ற ஆணையை அந்த மக்களுக்கே பாதகமான விதத்தில் திரித்து வியாக்கியானம் செய்கின்றார்கள். வாக்கு வேட்டை அரசியல் வாதிகளிடம் மக்கள் மைய அரசியல் இருப்பதில்லை. தனது மக்களை ஒரு சக்தியாகக் கருதாத ஒரு கட்சி வெளியாருக்காகக் காத்திருப்பதோடு தனது மக்களையும் அவ்விதம் அதிசயங்கள் அற்புதங்களுக்காகக் காத்திருக்கப் பழக்கிவிடுகிறது.

வெளியாருக்காகக் காத்திருப்பது வேறு, வெளியாரைக் கையாள்வது வேறு. வெளியாரைக் கையாள்வதென்றால் அது தன் மையத்திலிருந்து அதாவது தனது மக்களின் மையத்திலிருந்து சிந்திக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி நிரல் இருக்கவேண்டும். அதற்கு மக்களை ஒரு சக்தியாக அல்லது மையமாகக் கருத வேண்டும். அப்படிக் கருதினாற்றான் வெளிநோக்கிக் காத்திருப்பதை விடவும் கூடுதலான அளவில் உள்முகமாகத் திரும்பி தமது மக்களை ஒரு சக்தியாகத் திரட்டியெடுக்க முடியும்.

எனவே, ஜெனிவாவை நோக்கிச் செல்லுமிந்நாட்களில் தமிழ்க் கட்சிகள் யாவும் தமிழ்மக்களை அரசியல் மயப்படுத்துவதிலிருந்து மக்கள் மைய அரசியலைத் தொடங்க வேண்டும். அதைச் செய்வதென்றால், முதலில் கட்சிகள் தமது உறுப்பினர்களில் பெரும்பாலானவர்களை அரசியல் மயப்படுத்தவேண்டியிருக்கும் என்பதே மிகக் கசப்பான உண்மையாகும். தமிழ்க் கட்சிகள் இதைச் செய்யத் தயாரா? இது முதலாவது.

இரண்டாவது, சிவில் இயக்கங்களும், செயற்பாட்டு இயக்கங்களும் என்ன செய்ய . வேண்டும் என்பது. இப்போது நிலவும் ஒரு துருவ உலக ஒழுங்கின் கீழ் சிவில் அமைப்புக்களும் செயற்பாட்டியக்கங்களும்தான் உள்ளூர் மட்டத்தில் ஏதோ ஒரு அரசியல் சமநிலையை உருவாக்குகின்றன. அதிகாரத்தையும் அதிகாரப்பசி மிக்க அரசியல்வாதிகளையும் அவை தரைக்குக் கொண்டு வருகின்றன. பெருங்கட்சிகள் எப்பொழுதும் ஏற்கனவே, நிலவும் பெரும்போக்குகளைப் பிரதிபலிக்கின்றன. அவற்றால் ஒரு புதுப்போக்கை உருவாக்க முடியாது. ஆனால் செயற்பாட்டியக்கங்கள் இருக்கின்ற பெரும்போக்கின் பின்னோடுபவை அல்ல. மாறாக, அவை புதுப் போக்குகளை உருவாக்குபவை. எனவே, அவை அநேகமாக வாக்கு வேட்டை அரசியலுக்கு எதிர்த் திசையில் செல்பவை. இதனால், அவை எப்பொழுதும் பெரும் கட்சிகளுக்கு எதிரான அழுத்தக் குழுக்களாகக் காணப்படுகின்றன. இப்படிப் பார்த்தால், ஜெனிவாவை நோக்கிச் செல்லுமின் நாட்களில் தமிழ் மக்களின் மத்தியில் நிலவும் மாயைகளைக் களைவதற்குச் சிவில் இயக்கங்களாலும் செயற்பாட்டு இயக்கங்களாலும்தான் முடியும். ஆனால், ஈழத் தமிழர்கள் மத்தியில் அத்தகைய செயற்பாட்டியக்கங்களை மிகக் குறைந்தளவே காண முடிகிறது.

சமூகத்தில் துருத்திக் கொண்டு மேலெழும் பெரும்பாலானவர்கள் அரசியலுக்குள் நுழையவே ஆசைப்படுகிறார்கள். அதோடு கீழிருந்து மேல் நோக்கி உருவாகவேண்டிய சிவில் அமைப்புக்களிற்குப் பதிலாக மேலிருந்து கீழ் நோக்கி உருவாக்கப்படும் பிரமுகர் சபைகளே பெருமளவிற் காணப்படுகின்றன. அதாவது, தமிழ்ச் செயற்பாட்டு வெளியெனப்படுவது மிகவும் மெலிந்து காணப்படுகிறது.

இம்மாதம் 15ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் முனியப்பர் கோயிலுக்கு முன்பு ஒரு சிவில் எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தால் முன்னெடுக்கப்பட்ட அந்த ஆர்ப்பாட்டத்தில் 40 இற்கும் குறைவானவர்களே கலந்துகொண்டார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் ஒரு வடமாகாண சபை அமைச்சரும், சில வடமாகாண சபை உறுப்பினர்களும் அதில் அடங்குவர். ஆனால், அந்த எதிர்ப்பு நடவடிக்கையின்போது அதைப் பதிவு செய்ய வந்த ஊடகவியலாளர்கள் மற்றும் பார்வையாளர்களின் தொகை நாற்பதை விட அதிகம் என்பதை இங்கு சுட்டிக்காட்டவேண்டும்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்காக மன்னாலிருந்து வந்தவர்கள் இடை வழியில் படையிரால் திரும்பி அனுப்பப்பட்டதாக ஒரு காரணம் கூறப்பட்டது. எனினும், இது போன்ற சிவில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஒப்பீட்டளவிற் குறைந்தளவு எண்ணிக்கையினரே பங்குபற்றி வருகிறார்கள் என்பதும் திருப்பத் திரும்ப குறிப்பிட்ட சில பிரமுகர்களின் முகங்களையே அவற்றில் காண முடிகிறது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அதாவது, ஈழத் தமிழ் செயற்பாட்டு வெளியெனப்படுவது பெருங்கட்சிகளுக்குச் சவாலாக எழுமொரு வளர்ச்சியை இன்னமும் பெறவில்லை என்று பொருள். இது இரண்டாவது.

மூன்றாவது அபிப்பிராயத்தை உருவாக்கவல்ல தரப்பினர் என்ன செய்ய வேண்டும் என்பது. முதலில் ஒன்றைச் சுட்டிக்காட்ட வேண்டும். இத்தரப்பு முழுக்க முழுக்கச் சுயாதீனமான ஒரு தரப்பு அல்ல. இங்கேயும் கட்சிச் சாய்வும், இயக்கச் சாய்வும் கோட்பாட்டுச் சாய்வுகளும் உண்டு. எனவே, ஒவ்வொருவருக்கும் இழக்கப்பட முடியாத நிலையானநலன்கள் உண்டு. இந்நிலையான நலன்களை முன்னிறுத்தியே அவர்களுடைய அரசியலும் அபிப்பிராயமும் அமையும். தத்தமது நிலையான நலன்களைப் பலியிட்டு அரசியல் செய்ய அவர்களில் எத்தனை பேர் தயார்?

ஈழத்தமிர்கள் மத்தியில் காணப்படும் படிப்பாளிகள், ஆய்வாளர்கள், ஊடகவியலாளர்கள் மத்தியில் ஜெனிவா மாயை அநேகமாக இல்லை அல்லது ஜெனிவாவை ""விடியுமாமளவு விளக்கனைய மாயை" என்ற அடிப்படையில் விளங்கி வைத்திருக்கிறார்கள் என்றும் சொல்லலாம். ஆனால், என்னதான் விளக்கமிருந்தாலும் தத்தமது நிலையான நலன்கள் என்று வரும்போது அவர்களே ஜெனிவாவை ஒரு மாயையாகக் கட்டியெழுப்புகிறார்கள் அல்லது அந்த மாயையின் பின் இழுபடுகிறார்கள் ஈ.வெ.ரா பெரியார் கூறியதுபோல, அறிவும் சுயநலமும் முரண்படும் போது அறிவு தோற்று விடுகிறுது.

கணிசமான தமிழ் ஊடகங்களின் நிலையும் இத்தகையதே. ஊடகங்கள் அவற்றுக்குள்ள நிலையான நலன்களிற்கூடாகவே ஜெனிவாவைச் சித்தரித்து வருகின்றன.

எனவே, அபிப்பிராயத்தை உருவாக்கவல்ல தரப்புகள் தமது நிலையான நலன்களைக் கடந்துவந்து சிந்திக்கவேண்டும். அதற்கு வேண்டிய உரையாடற் பரப்புக்களைத் திறக்க வேண்டும். சிந்தனைக் குழாங்களையும் நிறுவ வேண்டும்.

இது கோப்பரேட் உலகம். இதில் எதுவும் கோப்பரேட் சாயலுடன் தான் இருக்கும். பெரிய பெரிய நாடுகளின் சிந்தனைக்குழாம்களே அவற்றிற்கு நிதி அனுசரணை செய்யும் எஜமானர்களுக்குச் சேவகஞ் செய்பவைகளாகக் காணப்படுகின்றன. கெடுபிடிப் போரின் முடிவையடுத்து சிந்தனைக் குழாம்களையும் சிவில் அமைப்புக்களையும் சக்திமிக்க நாடுகளின் முகவர் நிறுவனங்கள் தத்தெடுத்து வருகின்றன. இந்நிலையில் சுயாதீனமானச் சிந்திக்கும் புத்திஜிவிகளைக் காண்பது அரிது. சிறிய மற்றும் வறிய நாடுகளின் புத்திஜிவிகள் நிதி அனுசணையாளரின் புறொஜெக்ட் பட்ஜெற்றுக்குள் அடங்கிச் சிந்திக்கப் பழகி வருகின்றார்கள்.

அபிப்பிராயத்தை உருவாக்குவது அல்லது கருத்துவாக்கம் செய்வது என்பதெல்லாம் நிதி வழங்குநர்களின் புறொஜெக்ட் ஆகிவருகிறது. இத்தகையதொரு உலகச் சூழலில் சிறிய ஈழத்தமிழர்கள் மத்தியில் உள்ள படிப்பாளிகளும், ஊடகவியலாளர்களும், மதகுருக்களும் தத்தமது நிலையான நலன்களைத் தியாகம் செய்து சிந்தித்தால் மட்டும்தான் தமிழ் அரசியலை மாயைகளிலிருந்து விடுவிக்கலாம். வெளியாருக்காகக் காத்திருக்கும் ஒரு அரசியலை வெளியாரைக்கையாளும் ஓர் அரசியலாக பண்பு மாற்றம் செய்யலாம். இது விசயத்தில் டயஸ்பொறாவிடமிருந்து நிதி உதவிகளைப் பெறுவதன் மூலம் வெளித்தரப்புக்களில் தங்கியிருப்பதை இயன்றளவுக்குத் தவிர்க்கலாம். இது மூன்றாவது.

நாலாவதும், ஐந்தாவதும் சாதாரண ஜனங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது. முதலில் ஒன்றைக் கூறவேண்டும். அவர்களை சாதாரண ஜனங்கள் என்று அழைப்பதே தவறு. ஏனெனில், இப்பிராந்தியத்திலேயே மிகக் கொழுத்த பட்டறிவைப் பெற்ற மக்கள் அவர்கள். யார் யாருடையதோ நிலையான நலன்களுக்காகவும், யார் யாருடையதோ தவறுகளுக்காகவும் பலியிடப்பட்ட மக்கள் அவர்கள். தேர்தல் காலங்களில் இனமான அலையை எழுப்பி அவர்களுடைய பட்டறிவின் கூர் முனையை மழுங்கச் செய்யும் அரசியல்வாதிகள் தமக்கு வேண்டிய மக்கள் ஆணையை மிகச் சுலபமாகப் பெற்றுவிடுகிறார்கள். ஆனால், தேர்தல் முடிந்த கையோடேயே ""சீ...இவங்கள் திருந்தவே மாட்டாங்கள்" என்று சலிப்பதும் இதே சனங்கள் தான். ஆனால் அதுகூட ஒரு பட்டறிவுதான். சுமார் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக சில தலைமுறைகளிற்கூடாகச் சேகரிக்கப்பட்ட பட்டறிவு அது.

தமது பட்டறிவின் அடிப்படையில் இவர்கள் முடிவெடுத்தாலே போதும் அரசியல்வாதிகளும், செயற்பாட்டியக்கங்களும் சிவில் அமைப்புகளும், ஊடகங்களும், ஆய்வாளர்கள், படைப்பாளிகளும், அதற்கு உதவி செய்தாலே போதும் அல்லது குறைந்த பட்சம் அதற்கு தடையாக நிற்காமல் விட்டாலே போதும். தமிழ் மக்களை அவர்களுடைய பட்டறிவின் படி முடிவெடுக்கத் தூண்டினாலேபோதும். அதுவே அவர்களை அரசியல் மயப்படுத்துவதற்கான முதலாவது அடிவைப்பாக இருக்கும்.

அப்படியவர்கள். தமது சொந்த பட்டறிவின் பாற்பட்டு முடிவுகளை எடுப்பார்களாயிருந்தால் அது நிச்சயமாக தமிழ் அப்புக்காத்துமார்களை விடவும், சிங்கள் அப்புக்காத்துமார்களை விடவும் தீர்க்கதரிசனம் மிக்க ஒரு முடிவாகவே இருக்கும்.

நன்றி - குளோபல் தமிழ்ச் செய்திகள்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையில் ஒரு பொம்மைச் சாலை



ஆலய நிர்வாகிகள், பாடசாலை அதிபர்கள், நிறுவனத் தலைவர்கள் தங்களது அமைப்புகளுக்குச் சிலை செய்வது என்று முடிவெடுத்தவுடன் திருகோணமலையில் அவர்கள் நாடுமிடம் நகரின் மத்தியில் அமைந்திருக்கும் திரு.பிரம்மஸ்ரீ மு.பத்மநாப சர்மா ஐயா அவர்களின் பொம்மைச்சாலையாகும். யாழ்ப்பாணம் காரைநகரைப் பிறப்பிடமாக கொண்ட இவர் மிக நீண்டகாலமாக திருகோணமலையில் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

அவர் இருக்கும் வீட்டின் வளவு முழுவதும் பொம்மைகளால் நிறைந்திருக்கிறது. ஓய்வுபெற்ற ஆசிரியரான இவர் ஒரு இந்து மதகுரு. சிறுவயதில் இருந்தே கோவில்களில் காணப்படும் சிற்பங்களில் மனதைப் பறிகொடுத்து களிமண்களில் உருவங்களைச் செய்து பழகியதாக



குறிப்பிடுகிறார் இவர் . அதன் பின்னர் 1963 இல் திருக்கோணேஸ்வரத்திலும், 1970 இல் பேராதனை குறிஞ்சிக் குமரன் ஆலயத்திலும் சிற்பி திரு.நாகலிங்கம் அவர்களிடம் நேரடியாகக் சிற்பநுணுக்கங்களைக் கற்றுக்கொண்டதாக கூறுகிறார்.

திருகோணமலைப் பாடசாலைகளில் பலவற்றில் இருக்கும் சரஸ்வதிச் சிலைகளுக்குச் சொந்தக்காரரான இவரது வீட்டில் நூற்றுக்கணக்கான சிற்பங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. சிவன் ,அம்பாள், சிவலிங்கம், நவக்கிரகம், நந்தி, முருகன், வள்ளி, தெய்வானை ,மகாவிஷ்ணு, பூதகணங்கள், சிம்மம், யானை, குதிரை, அபிராமிப்பட்டர், வள்ளுவர், விவேகானந்தர் என்று நீண்டு செல்கிறது அந்த வரிசை.

பெரும்பாலும் இந்துமதத்தைச் சார்ந்த இவரது சிலைகள் இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள ஆலயங்களிலும், அறநெறிப் பாடசாலைகளிலும் அலங்கரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, உவர்மலை விவேகாநந்தா கல்லூரி என்பவற்றில் உள்ள ஏழு அடி உயரமான விபுலாநந்தர் சிலைகளும், ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் உள்ள ஏழு அடி கொண்ட தங்கம்மா அவர்களின் சிலையும் இவரது கைவண்ணத்திற்குச் சான்றாக அமைந்தவையாகும்.

சுமார் 60 வருடங்களுக்கு மேலாக சிற்பத்துறையில் ஈடுபட்டுவரும் இவரது சிற்பங்கள் பலமுறை திருகோணமலை நகரமண்டபத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது. 1992 இல் இவ்வாறு காட்சிக்கு வைக்கப்பட்ட நான்கு சிலைகள் தெரிவுசெய்யப்பட்டு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

2011 இல் திருகோணமலை பிரதேச சாகித்திய விழாவிலும் 2012 இல் கிழக்கு மாகணசபையின் விழாவிலும் திரு.பிரம்மஸ்ரீ மு.பத்மநாப சர்மா ஐயா அவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் மேலும் பல விருதுகளுக்குச் சொந்தக்காரரான இவர் தனது 76 வது வயதிலும் சிற்பப்பணியினைத் தொடர்வது குறிப்பிடத்தக்கது.



முற்றும்!!

வைத்திய கலாநிதி
த.ஜீவராஜ்

# காலத்தின் கோலம் !!!

எமது நாட்டில் எந்தவொரு இனத்தவர்களும் கடந்த 30 வருடகால போர்ச் சூழலை மறந்துவிட முடியாது. ஏனெனில் நாடளாவிய ரீதியில் அனைத்து இனத்தவர்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் கடும் பாதிப்புக்குள்ளாகியிருந்தனர். அதிலும் குறிப்பாக வடக்கு,கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த தமிழ் மக்கள் பாரியளவில் பாதிப்புக்குள்ளாயிருந்தனர். மேலும் அந்த கொடூர யுத்தத்தினால் பயங்கரவாதத்தில் நேரடியாக ஈடுபட்டவர்கள், அதை எதிர்த்துப் போராடிய முப்படையைச் சார்ந்தவர்கள், ஒன்றுமறியா அப்பாவி பொதுமக்கள், போன்றோரில் பல்லாயிரக் கணக்கானோருக்கு மரணத்தை தழுவ வேண்டிய நிலை ஏற்பட்டது.

## ...நாட்டு நடப்பு...

மழை அடியோடு ஓய்ந்தாலும் அதன் தூறல்கள் ஆங்காங்கே இருப்பது போன்று இன்றும் பலர் சொல்லொண்ணாத் துயரங்களுடன் வாழ்ந்து வருகின்றனர். சரணடைந்தவர்கள், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் இன்னும் சிறைக்கூடங்களில் வாடி வருகின்றனர். சிலருக்கு மன்னிப்பளிக்கப்பட்டு அவர்கள் புனர்வாழ்வு நடவடிக்கையின் பின் சமூக மயப்படுத்தப் பட்டுள்ளார்கள். இன்னும் சிலருக்கு நீதிமன்ற நடவடிக்கையின் பின் விடுதலை கிடைக்கலாமென கூறப்பட்டாலும் அவர்களுக்கு எதிராக இன்னும் குற்றப்பத்திரிகைகள் கூட தயாரிக்கப்படவில்லை மேலும் எந்தவித நடவடிக்கைகளும் இன்றி பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். காணாமல் போனோர் தொடர்பாக தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்கள் அடிக்கடி அவர்களின் உறவுகளால் மேற்கொள்ளப்பட்டு வருவதையும், சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு அவை கொண்டுவரப்பட்டுள்ளதையும் விசேடமாக குறிப்பிட வேண்டியுள்ளது.

மேலும் கடந்த கால போர்க் குற்றங்கள் தொடர்பான அறிக்கைகள் மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளும் ஆங்காங்கே இடம்பெற்று வருகின்றன. அண்மையில் மன்னார் பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளும் போது அங்கு பல மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பௌத்த நாட்டில் இப்படியும் மர்மப் படுகொலைகளா? என்று சர்வதேச சமூகம் வியக்கும் அளவுக்கு போர்க்கால மர்ம சம்பவங்கள் ஜெனிவா மகாநாட்டுக்கு முன்னர் வெளிவரத் தொடங்கியுள்ளன.

அதனால் அரசுக்கு தலை வலி மாத்திரமல்ல வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. மன்னாரில் வெளிவந்து கொண்டு இருக்கும் மனித எச்சங்கள் தொடர்பாக இலங்கை அரசின் பதில் எவ்வாறு இருக்கப்போகின்றது என்பதையும் உள்நாடும் வெளிநாடுகளும் உன்னிப்புடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

பல்லாயிரக்காணக்கான உயிர்கள், உடமைகள் அனைத்தும் அன்று இழக்கப்பட்டது மாத்திரமல்ல, மக்கள் தங்கள் உடலின் அவயவங்களையும் இழந்து நிரந்தர அங்கவீனராகியுள்ளனர். படைத்தரப்பிலும் ஆயிரக்கணக்கானோர் அங்கவீன நிலைக்குள்ளாகியுள்ளனர். எது என்னவாக இருப்பினும் அவ்வாறான ஓர் இருண்ட, பீதிகள் நிறைந்த ஒரு யுகம் மீண்டும் இந்த நாட்டில் தலைவிரித்தாடக் கூடாது என்பதே அனைத்து சமூகத்தினரதும் நிரந்தர பிரார்த்தனையாகும்.

மாத்தறை மாவட்டத்தை பிறப்பிடமாகவும், சேருநுவர பிரதேசத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அந்த சிங்களப் பெண்மணி பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக தான் விரும்பியவரை அடைய எடுத்த முடிவின் விளைவே சேருநுவர பிரதேச மண்ணில் அவள் காலடி எடுத்து வைக்க நேர்ந்தது. அன்று பயங்கரவாதிகளுக்கு உணவுப் பார்சல்கள் வழங்கினார் எனும் குற்றச்சாட்டின் பேரில் வெள்ளை நிற வேன் மூலம் அவளின் அப்பாவிக் கணவன் கடத்தப்பட்டார்.

"தனது கணவர் ஒரு சிங்களவர் அவருக்கும் பயங்கரவாதிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை அவரைத் தேடித் தாருங்கள்" என சீருடை அணிந்த அதிகாரிகள், மனித உரிமை உத்தியோகஸ்தர்கள், அரசியல்வாதிகள் ஆகியோரின் வீடுகளுக்கு அலைந்து திரிந்தும் அவளின் கணவருக்கு நடந்தது என்ன? என்று இதுவரை ஒருவருக்கும் தெரியாது.

யுத்த காலகட்டத்தில் அது ஒரு சாதாரண நிகழ்வாகும். எந்தவொரு அரசபடை அதிகாரியும் மனித உயிரை பெரிதாக மதிக்கவில்லை நாடளாவிய ரீதியில் எங்கும் எந்த இனத்தவரும் பாரபட்சமின்றி அவ்விதமான சட்டரீதியற்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.



கணவன் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து அவளால் சேருநுவர பிரதேசத்தில் தொடர்ந்தும் வாழமுடியாத சூழல் ஏற்பட்டது. அயலவர்கள் வாயளவில் அனுதாபப் பட்டார்களே தவிர அச்சம்பவத்தின் பின் அவளின் வீட்டுக்கே செல்ல தயக்கம் காட்டினார்கள். இரவோடு இரவாக தனது இரு ஆண் பிள்ளைகளையும் அங்கிருந்து கூட்டிக்கொண்டு மாகோ தொடரூந்து சந்திப்பகுதிக்கு சென்று எப்படியோ வாடகைக்கு ஒரு சிறிய வீட்டைப்பெற்றுக் கொண்டு அங்கு அவள் வாழ்ந்து வந்தாள். அந்தப்பகுதி அவளுக்கு புதியதாக இருந்தாலும் நாளடைவில் அவளும் பிள்ளைகளும் அப்பகுதியில பழக்கப்பட்டவர்களாக மாறினர். மாகோ தொடரூந்து நிலைய சந்தி எப்பொழுதும் மிக கலகலப்பாகவே காட்சி தரும். பகலும், இரவும் மாறி மாறி தொடரூந்துகள் பயணித்துக்கொண்டே

தொடரும்!!

பாலையூற்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரோகம்

## சிறுகதை

"வாடா பின்லேடா ஒழியாதே அச்சோடா" அஜித்தின் பாடல் வீடே அதிரும் படியாக ஒலித்துக் கொண்டிருந்தது. ப்ரியாவின் வீட்டில் வீட்டு வேலை செய்பவர்கள் பாடலின் இசைக்கு ஏற்றவாறே வேலை செய்து கொண்டிருந்தார்கள். "ப்ரியா ரேடியோ சத்தத்தை குறையடி காதெல்லாம் வலிக்குது" என்று ப்ரியாவின் அம்மா கமலம் கூறியது கூட அந்தப் பாட்டு சத்தத்தில் கேட்கவேயில்லை. கம்பஸ் போவதற்கு ரெடியாகிய ப்ரியா என்ன அஸ்வின் ரெடியா? என்றவாறே அஸ்வினின் ரூம் கதவைத் தட்டினாள். Yes.... ரெடியாகிட்டன். இதோ வாறன் Please wait for me என்றாான். Ok அஸ்வின் சீக்கிரம் வா என்று கூறியவாறே வாசலில் காத்திருந்தாள். என்னடி ரெடியாயிற்றியா..? வா.. வந்து சாப்பிட்டு போ என்று கூறியவாறே அஸ்வினையும் சாப்பிட அழைத்தாள் கமலம்.

அம்மா எனக்கு சாப்பாடு வேணாம் இப்பவே ரொம்பவே நேரம் பொயிற்று. நானும், அஸ்வினும் கம்பஸ் கன்றீனில் சாப்பிடுறம் என்று கூறிக் கொண்டு இருக்கும் போதே அஸ்வின் நான் ரெடி ப்ரியா போகலாம் என்றான். இப்படியே அங்கு, இங்கு சாப்பிட்டு ஏதாவது வருத்தம் என்று வந்து நில்லுங்க ரெண்டு பேரும் அப்போது இருக்கு உங்களுக்கு என்று கூறியவாறே அவளது வேலைக்குச் சென்றாள் ப்ரியாவின் தாயார்.

அஸ்வின் மிகவும் வசதி படைத்தவன். அப்பா நாராயணன், அம்மா லட்சுமி. இருவரும் தங்களின் மகள் காவ்யாவுடன் கனடாவில் இருக்கின்றார்கள். கமலாவின் மகள்தான் ப்ரியா. அஸ்வினின் முறைப் பொண்ணு. இருவரும் ஒரே வீட்டில் இருப்பதனாலும், உறவுக்காரர்கள் என்பதனாலும் நல்ல நட்பு இருவரிடமும் இருந்தது. ப்ரியாவின் அப்பா பெரிய வியாபாரி. எந்த நாளும் ஏதாவது ஒரு வியாபார விடயமாக வெளிநாடுகளுக்குச் சென்று கொண்டிருப்பவர். வீட்டில் அவரைப் பார்க்கவே முடியாது. அஸ்வினின் குடும்பத்தைப் பார்க்கிலும் மிகுந்த பணக்காரக் குடும்பம் ப்ரியாவினுடையது.

ப்ரியா, அஸ்வின் இருவரும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் இறுதி வருடத்தில் படித்துக் கொண்டிருப்பவர்கள். ப்ரியா, அஸ்வின், பிரவீணா, சுதீப், கணேஷ் ஆகிய ஐந்து பேரும் நல்ல நண்பர்கள். எங்கு செல்வதென்றாலும், என்ன செய்வதென்றாலும் எப்போதும் ஒன்றாகத்தான் இருப்பார்கள். அஸ்வின், கணேஷ் இருவரும் நல்ல துடிதுடிப்புடன் எப்பவும் கிண்டலும் கேலியுமாக இருப்பார்கள். அதில் சுதீப் கொஞ்சம் வித்தியாசமானவன். கஸ்டப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவன். மிகவும் அழகானவனும், கெட்டிக்காரனும் என்பதுடன் மிகவும் எளிமையானவன். அத்துடன் தனது குடும்பத்தின் மீது மிகுந்த பற்றும், பாசமும் கொண்டவன். நன்றாகப் படித்து தனது குடும்ப கஸ்டத்தைப் போக்க வேண்டும் என்பதற்காக மிகவும் கஸ்டப்பட்டு படிப்பவன். அஸ்வினின் கூட்டத்தில் இவன் இருப்பது ஆச்சரியம்தான்.

சுதீப் மீது ஒரு தலையான காதல் வைத்திருந்தாள் ப்ரியா.



ஆனால் சுதீப் காலித்தது பல்கலைக்கழகமே பின்னால் சுற்றும் நிர்த்தனா மீது. நிர்த்தனா... பெயருக்கு ஏற்றவாறு அத்தனை அழகானவள். அவளைப் பார்த்து அத்தனை பெண்களும் பொறமைப்படும் அளவிற்கு அழகும், அடக்கமும் நிறைந்தவள். மருத்துவத்துறையில் படிக்கும் நிர்த்தனாவின் பின்னால் நிறைய ஆண்கள் சுற்றுவதும், விருப்பம் கேட்பதும் வழக்கமான விடயமாக இருந்தது. நிர்த்தனாவிடம் விருப்பம் கேட்காதவர்கள் சுதீப்பும், அஸ்வினும் மட்டும்தான். அஸ்வின் நிர்த்தனாவிடம் விருப்பம் கேட்டு அலையும் எல்லோரையும் கிண்டலும், கேலியும் செய்பவன். "என்னடா சுதீப் இவனுகள் லூசா.... இப்படி இவளுக்குப் பின்னால் சுற்றித் திரியிறானுகள் இவளை விட்டா வேற பொம்பிளையே இல்லையா?" என்று அலுத்துக் கொள்வான் அஸ்வின். சுதீப் எதுவும் பேசாமல் சிரித்த வண்ணமே இருப்பான். ஏனெனில் நிர்த்தனா மீது அவனுக்கு அளவு கடந்த காதல். ஆனால் இதுவரை இந்த விடயத்தை அவன் யாரிடமும் சொன்னதே இல்லை.

சுதீப்பின் தாய் வீட்டில் இருப்பவள். வேலை எதுக்கும் செல்வதில்லை. தந்தை சிறு கடை வைத்திருப்பவர். சுதீப் பிறந்தது வளர்ந்தது எல்லாமே மட்டக்களப்பில்தான். கொஸ்ரலில் இருந்து கம்பஸ் வந்து செல்வான். ப்ரியாவும், அஸ்வினும் கண்டியைச் சேர்ந்தவர்கள். நிர்த்தனா கல்முனையைச் சேர்ந்தவள். நிர்த்தனாவும் நல்ல வசதி படைத்தவள். ஆனால் அவள் எதனையும் வெளிக்காட்டுவதில்லை. அழகு, பணம், அறிவு மூன்றும் இருக்குமிடத்தில் கட்டாயம் ஆணவம் இருக்கும். ப்ரியா அப்படியில்லை ஆடம்பரம் இருப்பதுடன் திமிரும் கொண்டவள். நிர்த்தனா பெரிதாக யாருடனும் சேரமாட்டாள். அவளது தோழி ப்ரியாதான். ப்ரியா எப்பொழுதும் அவளுடைய கூட்டத்துடன் இருந்தாலும் நிரத்தனாவுடனும் சேர்ந்து இருப்பாள். நிர்த்தனா அவளது, வேலை, படிப்பு என்று இருப்பாளே தவிர வேறு எந்த அரட்டையிலும் கலந்து கொள்வதில்லை. எப்போதாவது நேரம் கிடைத்தால் ப்ரியா தன்னுடைய நண்பர்களிடம் சொல்லி விட்டு நிர்த்தனாவுடன் சென்று விடுவாள். நிர்த்தனாவின் நண்பியாக இருந்தாலும் அவள் மீது பொறாமை இருந்தது ப்ரியாவுக்கு. காரணம் தன்னை விட அழகு மிகுந்தவள் என்பதனால்..... இருந்தும் அதை வெளிக்காட்டாமல் சகஸமாகவே நிர்த்தனாவுடன் பழகினாள். இவ்வாறு இவர்களது பல்கலைக்கழக வாழ்க்கை சென்று கொண்டிருந்தது. சுதீப் எப்படியாவது தனது காதலை நிர்த்தனாவிடம் சொல்லிவிட வேண்டும் என்று தவித்தான். அதே போன்று ப்ரியாவும் சுதீப்பிடம் தனது காதலை சொல்லிவிட வேண்டும் என்று தவித்தாள். நிர்த்தனாவிடம் பலர் காதலிப்பதாக கூறிய போதிலும் அவள் இதுவரை யாரையும் நிமிர்ந்து பார்த்ததே இல்லை. ஆனால் அஸ்வின் நிர்த்தனாவை கிண்டல் கேலி செய்யும் போது சுதீப் ஏதாவது சொல்லி அவள் பக்கம் பேசும் போதெல்லாம் சுதீப் மீது ஒரு இனம் புரியாத அன்பு இருந்தது நிர்த்தனாவுக்கு.

ஒரு நாள் நிர்த்தனாவும் ப்ரியாவும் பல்கலைக்கழகப் பூங்காவில் கதைத்துக் கொண்டிருக்கும் பொழுது ப்ரியா சுதீப் பற்றி அலட்டிக் கொண்டிருந்தாள். நிர்த்தனாவும் கேட்டுக் கொண்டிருந்தாள். சுதீப்பை பற்றி ப்ரியா சொல்லும் போது மனதில் ஒரு சந்தோசத்தை உணர்ந்தாள் நிர்த்தனா. ப்ரியா நீ சொல்லுவது சரி அவர் பார்க்கிறதுக்கு ரொம்ப நல்லவராகத்தான் தெரிகிறார்... நல்ல குணம், கெட்டிக்காரர்... என்று சுதீப்பைப் பற்றி நிர்த்தனா அடுக்கிக் கொண்டே சென்றாள். இது ப்ரியாவுக்கு வெறுப்பையும், கோபத்தையும் ஏற்படுத்தியது. சுதீப் பற்றி இவள் எதற்கு இப்படியெல்லாம் புகழ்ந்து பேச வேண்டும் என்று மனதில் நினைத்துக் கொண்டு பேச்சைக் கொடுத்தாள் ப்ரியா. என்னடி நிர்த்தனா சுதீப்பை அவர், இவர் என்று மிகவும் மரியாதையாகப் பேசுறாய்? என்றாள் ப்ரியா. இல்லடி நமக்கு பக்கத்தில் இல்லாதப்போ மரியாதையாகத்தானே பேசணும் அதுதான் என்றாள். இருந்தும் நிர்த்தனாவின் பேச்சு பிடிக்காததால் அவ்விடத்தை விட்டு விலகிச் சென்றாள் ப்ரியா.

அன்று இரவு ப்ரியாவுக்கு பூங்காவில் நிர்த்தனா சுதீப்பைப் பற்றி பேசிய விடயங்களே நினைவுக்கு வந்த வண்ணம் இருந்தது. "சுதீப்பை மிஸ் பண்ணிடுவேனோ?" என்ற பயத்தை ஏற்படுத்தியது. மறுநாள் எப்பிடியாவது தன் காதலை சுதீப்பிடம் சொல்வது என்ற முடிவு எடுத்தாள். அடுத்த நாள் வழமையை விட அழகாக தன்னை அலங்கரித்துக் கொண்டு சுதீப்பை சந்தித்து தன் காதலைச் சொல்ல வந்த போது சுதீப் ப்ரியாவைச் சந்திப்பதற்காகவே வந்தது போன்று ப்ரியா உன்னிடம் ஒரு விடயம் சொல்லணும் என்றான். சுதீப்பும் தன்னிடம் காதலைச் சொல்லத்தான் வந்திருக்கிறான் என நினைத்து சந்தோசப்பட்டு சொல்லுங்க... என்றாள் ப்ரியா. சுதீப்! என்ன விடயம் என்றாள் ஆவலாக! அது வந்து... வந்து நான் உயிருக்கு உயிராக காதலிக்கின்றேன் ப்ரியா என்றதும் ப்ரியாவிற்கு நெஞ்சுக்குள் பட்டாம் பூச்சியே படபடத்தது போன்று மனமெங்கும் சந்தோசம் பொங்கியது. என்ன சுதீப் நிஜமாவா?..... என்றாள். ஆம் ப்ரியா! நீ நிர்த்தனாவின் குசனைனெ தானே.... என்றான். ஆமாம் அதுக்கென்ன? ... நான் நிர்த்தனாவை காதலிக்கின்றேன். நீதான் எப்படியாவது அவளிடம் சொல்லி எங்களைச் சேர்த்து வைக்க வேணும் Please என்றான் கெஞ்சலாக..... ப்ரியாவுக்கு தூக்கி வாரிப் போட்டது. நெஞ்சே வெடித்தது போன்று இருந்தது அவளுக்கு... சற்று நேரம் திகைத்துப் போய் நின்றவளை உலுக்கிய சுதீப் என்னாச்சு? எனக்கு உதவி செய்வாய்தானே ப்ரியா?... என்று கேட்டதற்கு தலையசைத்த ப்ரியாவிடம் ஒரு கடிதத்தை கொடுத்து நிர்த்தனாவிடம் கொடுக்கச் சொன்னான் சுதீப். கடிதத்தை வாங்கிக் கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் பூங்காவில் யோசித்துக் கொண்டிருந்தாள். அப்போது அங்கு வந்தாள் நிர்த்தனா. ஏதாவது பிரச்சினையா? ப்ரியா என்றாள். இல்லடி சும்மாதான் இருக்கன் சொல்லு என்றாள். உன்னிடம் ஒன்று சொல்லணும் ப்ரியா..... எனக்கு சுதீப் மீது இனம் புரியாத அன்பு..... அவனை காதலிக்கின்றேன் என்று நினைக்கின்றேன் என்றதும் ப்ரியாவுக்கு ஒரே அதிர்ச்சி. என்னடி சொல்லுறா?... அவனும் உன்ன விரும்புறானா?..... என்றாள் பதட்டத்துடன். அதற்கு நீதான் உதவி செய்யணும் உன்ட நண்பன் தானே சுதீப். அவரிடம் நீதான் சொல்லி என்னுடைய அன்பை அவனுக்குப் புரிய வைக்கணும் என்றாள் நிர்த்தனா வெட்கத்துடன்... நான் என்னடி பன்ற... என்று இழுத்தவள் சற்று நேரம் யோசித்தவளாய் முயற்சி பன்றன்டி... என்றாள் Thanks ப்ரியா என்றவளிடம், நிர்த்தனா எனக்கு நேரமாகுது Friends பார்த்திட்டு இருப்பாங்க நான் போயிற்று வாறன் என்று சொல்லிச் சென்றாள்.



அன்று இரவு சுதீப் நிர்த்தனாவுக்குக் கொடுத்த கடிதத்தை வைத்துக் கொண்டு சுதீப் எப்படியாவது தனக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக என்ன செய்யலாம் என்று தீவிரமாக யோசித்து ஒரு முடிவுக்கு வந்தாள் நிர்த்தனா. ஒரு திட்டம் தீட்டினாள் மனதில் சந்தோசம்.... முகம் தெளிவானது.

அடுத்த நாள் நிர்த்தனா எழுதியது போன்று ஒரு காதல் கடிதம் எழுதிக் கொண்டாள். அஸ்வின்! இது நிர்த்தனா உன்னிடம் கொடுக்கச் சொல்லி தந்தாள் என்று ஒரு கடிதத்தை நீட்டினாள்.



நிர்த்தனாவா?..... அவள் எதற்கு எனக்கு கடிதம் தரணும்? என்றான் அஸ்வின். உன் முடிவு என்ன என்று கேட்டு வரச் சொன்னாள். என்னடி சொல்லுற...? நிர்த்தனா உன்னை விரும்புறாளாம் உன்ட முடிவு என்ன என்று கேட்கச் சொன்னாள். எனக்கு யோசிக்கணும்.... என்னால நம்பவே முடியல்ல நீ யோசி..... ஆனால் இந்த விடயம் யாருக்கும் தெரிய வேணாம்..... என்று சொல்லச் சொன்னவள்... என்று கூறிய படி சென்றாள். சுதீப்பிடம் சென்று நிர்த்தனா அஸ்வினை விரும்பவதாகவும் அஸ்வின் நிர்த்தனாவை விரும்புவதாகவும் கதை கட்டிவிட்டாள். இங்க பாரு நீ கொடுத்த கடிதத்தை திருப்பி கொடுக்கச் சொல்லி என்னிடமே தந்து விட்டாள் என்று கடிதத்தைக் கொடுத்தாள். அவள் உன்னை எவ்வளவு கேவலமாக பேசினாள் தெரியுமா? நான் அவளை கண்டபடி திட்டி விட்டுத்தான் வந்தன் என்று கோபப்படுவது போன்று நடித்தாள். அவளது வசதிக்கு ஏற்றவன் அஸ்வின்தானாம்..... அதனால்தான் அவனை காதலிக்கிறாளாம் என்று கதை கட்டினாள் ப்ரியா. அதனை சுதீப்பினால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை அப்படியா?... ப்ரியா என்று கேட்டு விட்டு மிகவும் மன வேதனையுடன் சென்றான் சுதீப். ப்ரியா எப்படியும் சுதீப்பை தன் பக்கம் திருப்பி விடலாம் என்று மனதில் எண்ணிக் கொண்டு நிரத்தனாவிடம் சென்றாள்.

நிர்த்தனா ப்ரியாவின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். ப்ரியாவைக் கண்டதும் நிர்த்தனா ஓடி வந்து சுதீப்பின் மன நிலையைக் கேட்டாள். Sorry நிர்த்தனா.... சுதீப் உன்னை விரும்பவில்லையாம் அவன்... அவன்... என்னைத்தான் விரும்புறானாம் என்று சுதீப் நிர்த்தனாவுக்குக் கொடுக்கச் சொல்லிக் கொடுத்த கடிதத்தை தனக்குக் கொடுத்ததாகக் காட்டினாள். அதுமட்டுமில்லை நிர்த்தனா உன்னை அஸ்வின் உயிருக்கு உயிராக விரும்புகிறானாம் என்றாள் படபடப்புடன் .. என்னடிசொல்ற அஸ்வினா?.. எனக்கு... எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிடி... இல்ல நிர்த்தனா நம்ம விரும்புறவனை விட நம்மளை விரும்புறவனைக் கட்டினால் சந்தோசமாக இருக்கலாம் தானே... என்ன சொல்லுறாடி நிர்த்தனா? என்றாள். பதில் எதுவும் பேசாமல் சென்றாள் நிர்த்தனா.....

நிர்த்தனா எழுதியது போன்று கடிதங்களை எழுதி அஸ்வினிடம் கொடுத்தாள் ப்ரியா. இப்படியே அஸ்வின் மனதில் நிர்த்தனா மீது காதலை வளர்த்தாள். இப்போது அஸ்வின் நிர்த்தனாவை கிண்டல் செய்வதே இல்லை. ப்ரியாவும், அஸ்வினும் சேர்ந்து இருக்கும் போது ப்ரியாவை பார்த்து நிர்த்தனா சிரிக்கும் போது அஸ்வின் உன்னைப் பார்த்துத்தான் நிர்த்தனா சிரக்கிறாள் என்று அஸ்வினை ஏத்தி விட்டாள். சுதீப் கற்றலில் ஈடுபாடு இல்லாதவனாய் அடிக்கடி லீவு எடுத்தான். ப்ரியா சுதீப்பின் வீட்டுக்குச் சென்று அவனின் பெற்றோரிடம் நல்ல விதமாகப் பேசி நல்ல பெயர் எடுத்தாள். அவர்கள் சுதீப்பிற்கு ப்ரியாவை திருமணம் செய்து வைக்கலாம், நல்ல பிள்ளை ப்ரியா என்று சொல்லும் அளவிற்கு நல்ல பெயர் எடுத்தாள். இருந்தும் சுதீப்பினால் நிர்த்தனாவை மறக்க முடியவில்லை அவள் நினைவாகவே வாழ்ந்தான்.

சுதீப்பின் நிலையை அறிந்து அஸ்வினுக்கு கவலையாக இருந்தது. அவனது நண்பர்களான பிரவீணா, கணேஷ், அஸ்வின் மூவரும் சுதீப்பை விட்டு பிரிந்து இருந்ததே இல்லை. இதனால் அவர்களுக்கு ஒரே கவலை. ப்ரியாவும் இப்போது அவர்களுடன் சேர்வது குறைவு இவற்றுக்கு எல்லாம் காரணம் தெரியாமல் சுதீப்பை சந்தித்து ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்று முடிவு செய்தார்கள்.

சுதீப்பை சந்திக்க அவனின் வீட்டுக்குச் சென்றனர். சுதீப் என்று குரல் கொடுக்க வாங்கடா... என்றான் உள்ளிருந்தவாறே. என்னடா?.. என்னாச்சு?.. என்றாள் பிரவீணா. என்னடா எதுவும் பேசாமல் இருக்கிறாய்.... என்ன பிரச்சினைடா உனக்கு? என்றான் அஸ்வின். நீதாண்டா பிரச்சினை.. என்று ஓ..வென்று அழுதான் சுதீப். என்னடா.. என்ன சொல்லுறாடா?... இவன் என்ன செய்தான்... என்றாள் பிரவீணா. பிரவீணா நான் நிர்த்தனாவை உயிருக்கு உயிராக காதலிச்சேன்.. ஆனால் அவள் இவனைத்தான் காதலிக்கிறாளாம் இவனும் அவளைக் காதலிக்கிறானாம்.. என்றான்

தொடரும்

மிதிலா ஜெயமோகன்
முனைத்தீவு, மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமுரசு

## இவ்வார இலக்கிய நிகழ்வு

### "முற்றத்துச் சந்திப்பு"

"புதிய களம் சஞ்சிகையின் அறிமுகமும் சமகால இலககியப் பேச்சுக்களும்

இவ்வாரம் திருகோணமலையில் "முற்றத்துச் சந்திப்பு " என்ற இலக்கிய நிகழ்வு நடைபெறவுள்ளது.

காலம் : 08.03.2014
நேரம் மாலை 4 மணி
இடம்: திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரி

இந் நிகழ்வில்

நினைத்துரைத்தல் - மறைந்த நாவலாசிரியர் ந.பாலேஸ்வரி அவர்கள்

திருகோணமலை இலக்கிய விழா 2014 - அறிமுக விளக்கம்

உட்பட சமகால இலக்கியப் பேச்சுக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**கிழக்கில் நடைபெறும் இலக்கியச் செயற்பாடுகளை மக்களுக்குத் தெரியப்படுத்த எழுதுங்கள் -**

**கவிமுரசு. இல 159 ஏ. கடல்முக வீதி. திருகோணமலை.**

## மலைமுரசு

வார மலர் மலை முரசு - தமிழ்
ஆரம் பதித்து வரும்
அறிவுத் திரு ஏடு
ஓரம் சாயாமல் துணிவோடு
உண்மைத் தகவல்களை
சீராகத் தரும்
செந்தமிழர் திரு ஏடு
சோரம் போகாத
சுதந்திரத் தன்மையுடன்
வாசகர் மத்தியில்
வலம் வரும் திரு ஏடு
திருகோணமலையின்
சிறப்புக்களை மிகப்
பொருத்தமாகத் தரும்
அருமையான திரு ஏடு
கோணமலையில்
கோணேசர் திருப்பூமியில்
வானளாவ உயர்ந்து நாடெங்கும்
வலம் வர மலை முரசை
வாழ்த்துகின்றேன்!

கவிக்குயிலன் - சேனையூர்

## வாய்மை வாழ்வு

சந்தி சிரிக்க வைக்கும்
சதுராட்டத்தை நிறுத்தி
வெந்தும் வேகாதாக் நிகழும்
விபரீத எண்ணங்களை
விரட்டுவோம்

கந்தையானாலும் - நாம்
கசக்கிக் கட்டுவோம்
சொந்தமானாலும் பிறர்
துயஉ துடைக்க உதவுவோம்

ஓலைக் குடிசையானாலும்-நல்ல
உயர் சுத்தமாய் வைத்திருப்போம்
கூழானாலும் நாம் -குளித்தே உண்போம்

பாயில் படுக்க நேஉந்தாலும்
பண்பு காத்துப் பழகுவோம்
உயர்ந்த எண்ணமானாலும்
உண்மைக்கே கைகொடுப்போம்

வாழத்துடிப்போர்க்கு
வழிவிட்டு
வாய்மை வாழ்வு
வாழ்வோம் !

—

கலாபூசணம்
சி.என். துரைராஜா

## செம்மொழியாகிச் சிறப்பூட்டும் தமிழ்

செம்மொழியாகி சிறப்பூட்டும் - தமிழ்
அற்புதத் தமிழ்
அமுதத் தமிழ்
சொற் திறன் பெற்ற
சுதந்திரத் தமிழ்!
இடர் பல செய்தாலும்
தடை உறாத் தமிழ்
இறை அருள் கொண்ட
இனிய செந்தமிழ்!
சங்கமம் வளர்த்த தமிழ்
சாதனை படைத்த தமிழ்
எங்கும் புகழ் பரப்பும்
இளமை குன்றாத் தமிழ்!
கவிதைக்கு மெருகூட்டும்
கட்டழகுத் தமிழ்
புவியெங்கும் மங்காது
பொங்கி வளரும் தமிழ்!
அம்மா என்றழைத்தாலே
ஆருயிராகும் தமிழ்
செம்மொழியாகி என்றும்
சிறப்பூட்டும் தமிழ்!

கவிக்குயிலன் - சேனையூர்

**உங்களது கவிதைகளும் இடம் பெற வேண்டுமா?**

கவிதைகளை, விரும்பினால்
உங்களது படங்களுடன்
அனுப்பி வையுங்கள்..

**கவிமுரசு. இல 159 ஏ. கடல்முக வீதி. திருகோணமலை.**

# எழுத்துப் பறவையொன்று சிறகசைத்து விண்ணோக்கி

எழுத்துப்பறவை ஒன்று சிறகசைத்தது விண்ணோக்கி.... :
எழுத்தாளர் ந. பாலேஸ்வரி பற்றிய சிறப்புப் பதிவு :
முல்லைஅமுதன்



இலங்கை நாவல் இலக்கிய வரலாற்றில் தனக்கென தனி இடத்தை தக்கவைத்துக் கொண்டவர் ந.பாலேஸ்வரி. அந் நாட்களில் மித்திரன், ஜோதி, தினகரன், ஈழநாடு, கல்கி, குங்குமம், உமா, தமிழ்ப்பாவை, சுடர், சிரித்திரன், கவிதை உறவு, தமிழ்மலர், ஒற்றைப்பனை, திருகோணமலை எழுத்தாளர் சங்கம் மலர், சுதந்திரன் போன்ற பல அச்சு ஊடகங்களில் சிறுகதை, நாவல், கட்டுரை என எழுதிவந்தவர். இன்றுவரை அவரை நாவல் ஆசிரியராகவே அனைவர்க்கும் தெரியும். அவர் சிறந்த பேச்சாளர். சிரித்திரன் ஆசிரியர் கூட அவரின் எழுத்தை சிலாகித்துப் பேசியதை கேட்டிருக்கிறேன்.

இவரின் எழுத்தில் லக்ஸ்மி, ரமணிச்சந்திரன் போன்றோரின் சாயல் இருப்பதாகக் கூறுவர். ஒருமுறை திரைப்படம் சார்ந்து நண்பர்களுடன் பேசிக்கொண்டிருக்கையில் இவரின் நாவலைப் படமாக்கினால் நன்றாக இருக்கும் என்று ஆலோசித்தோம். அப்போது செங்கை ஆழியானின் யானை எனும் நாவலைத் திரைப்படமாக்கும் முயற்சியும் மேற்கொண்டதாகவும், வனபரிபாலனச் சட்டம் இடம் கொடுக்காததால் அது கைவிடப்பட்டதாகவும் சொன்னார்கள். பிறகு காலம் எம்மை மாற்றிவிட அது முடியாது போயிற்று.

எளிமையாக வாழ்ந்தவர். தனது சேகரிப்புகளெல்லாம் அழிந்துவிட்டதாகவும் சொன்னார். இவரின் தந்தையின் தமிழ்ப்பற்றும், தந்தையாரின் தம்பி திருகோணமலையின் பிரபல எழுதாளராகவும் இருந்ததும் இவரையும் அத்துறை நாடிச் சென்றதாக இருக்கலாம். ஆரம்பத்தில் தந்தையாரின் பெயரான பாலசுப்பிரமணியம் அவர்களின் பெயரையும் இணைத்தே எழுதினார். பின்னர் திருமணமாகியதும் கணவனின் பெயருடன் இணைத்து தொடர்ந்து எழுதினார்.

மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்ற இவர் திருகோணமலை சிறி சண்முகவித்தியாலயம், சுண்ணாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, திருகோணமலை புனித மரியாள் கல்லூரியிலும் கல்வியைப் பெற்றார்.

இவரின் எழுத்துக்கு உறுதுணையாக கணவரும், ஆசிரியைத் தொழிலும் உதவியதாகச் சொல்வார்.

இவரின் தொடர்ந்த இலக்கியப் பயணம் இவருக்கு தமிழ்மணி, சிறுகதைச் சிற்பி, ஆளுனர் விருது, கலாபூசணவிருது ஆகியவற்றுடன், 2010இல் மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கிய 'தமிழியல் விருது' குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

திருகோணமலை மனையாவழி கிராமத்தில் 07.:12.:1929 இல் பிறந்த இவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் 'அமரர்' நேமிநாதன் அவர்களின் உறவுக்காறர் என்றும் அறியப்படுகிறது.

அமைதியாகவும், துணிச்சலாகவும் எழுதிய பெண் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்க இடத்தை தக்கவைத்துக்கொண்டார். பத்திரிகை, சஞ்சிகைகள் மாத்திரமன்றி மலர்களிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்தன. இவரின் நூல்களாக சுடர்விளக்கு, பூஜைக்கு வந்த மலர், உறவுக்கப்பால், கோவும் கோயிலும், உள்ளக்கோயிலில், உள்ளத்தினுள்ளே, பிராயச்சித்தம், மாது என்னை மன்னித்து விடு, எங்கே நீயோ அங்கே நானும் உன்னோடு, அகிலா உனக்காக, தத்தை விடு தூது, நினைவு நீங்காதது, சுமைதாங்கி, தெய்வம் பேசுவதில்லை என வெளிவந்துள்ளன. இதில் பூஜைக்கு வந்த மலர் குறுகிய காலத்துள் மீள்பிரசுரம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சில வருடங்களுக்கு முன் லண்டனிலும் வந்து தங்கி நின்றார். தனது அனுபவ வெளிப்பாடுகளை கதையாகத் தந்திருக்கிறார். வாழ்வின் பல்வேறு கூறுகளை ஜனரஞ்சகமாக எழுதுவதிலும் வெற்றிகளைக் குவித்தவர். பல இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதிலும் ஆர்வம் காட்டினார். மொழி ஆர்வமுள்ள மாணவர்களையும் செயல்பாட்டாளர்களாக்கினார்.

இதனால்தானோ என்னவோ பல்கலைக்கழக மாணவர்கள் இவரது படைப்புக்களில் பெண்கள் பற்றியும், சிறுகதைகள், நாவல்கள் பற்றிய ஆய்வை தங்களது பட்டப்படிப்புக்கு ஆய்வு செய்திருக்கின்றனர். அவைகள் நூலாக வரும் பட்சத்தில் மேலும் ந.பாலேஸ்வரி அவர்களின் படைப்புக்கள் பற்றி முழுண்மயாக அறிய வாய்ப்பாகும் என நம்புகின்றோம்.

ஆனால் அவர் பற்றிய நினைவுகளே நமக்கு எஞ்சியிருக்கும். ஏனெனில் 27.:02.:2014 அன்று அவரை இறைவன் அழைத்துக்கொண்டான்.

தொடர்ந்து நமக்கு அதிர்வே வந்து கொண்டிருக்கிறது. அன்புமணி, பிறேம்ஜி, பாலுமகேந்திரா, கே.எஸ்.பாலச்சந்திரன், பாலேஸ்வரி என படைப்புலகம் இழப்பைத் தந்துகொண்டிருக்கிறது.

கனத்த பொழுதுகளைச் சுமந்து செல்லும் காலம் அவர்கள் விட்டுசென்ற நட்பையும், படைப்பையும் மனங்கள் சுமந்தபடி செல்லவே செய்யும்.

ஆழ்ந்த கவலையுடன் முல்லைஅமுதன்

நன்றி - வணக்கம் லண்டன்
(www.vanakkamlondon.com)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையதளத்தில் பரவும் ஆபாச படங்கள்



நவ்நித் கவுர் தமிழில் விஜயகாந்துடன் அரசாங்கம் படத்தில் நடித்தார். அம்பாசமுத்திரத்தில் அம்பானி படத்தில் கருணாஸ் ஜோடியாக நடித்தார். தெலுங்கிலும் ஏராளமான படங்களில் நடித்துள்ளார். நவ்நித் கவுருக்கும் மகராஷ்டிரா மாநிலம் பத்னேரா சட்டமன்ற தொகுதி சுயேச்சை எம்.எல்.ஏ. ரவி ராணாவுக்கும் 2011 ல் திருமணம் நடந்ததன் பிறகு அவர் சினிமாவில் நடிக்கவில்லை.

தற்போது நவ்நித் கவுர் காங்கிரஸ் கட்சியில் இணைந்து அரசியல் பணயாற்றி வருகிறார்.

இந்த நிலையில் அவர் அரைகுறை ஆடையில் ஆபாசமாக இருப்பதுபோல் இந்த படங்கள் உள்ளது.

இதனால் நவ்நீத் கவுர் அதிர்ச்சி அடைந்துள்ளார். இந்த படங்களை இணையத்தில் பரப்பியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி பொலிசில் புகார் கொடுத்துள்ளார். நவ்நித் கவுர் கணவரும் எம்.எல்.ஏ.வுமான ரவிராணா கூறும்போது, நவ்நித் கவுர் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்த படங்களை பரவவிட்டுள்ளனர் என்றார்.

# நடிகரின் உருவத்தை பச்சைகுத்திய த்ரிஷா

சென்னை:பாலிவுட் ஹீரோயின்கள் தொடங்கி டோலிவுட் ஹீரோயின்கள் வரை பிடித்த நபரின் பெயரை டாட்டு போட்டுக்கொள்வது பேஷன்.

த்ரிஷா தனது உடலில் பூ வடிவில் பச்சை குத்தி இருப்பதுடன் முதுகில் தனது ராசி சின்னமான ரிஷபம் வரைந்திருக்கிறார். இந்நிலையில் தொடையிலும், கைகளிலும் ஜெயம் ரவியின் உருவத்தை டாட்டூவாக வரைந்திருக்கிறார். இதை வேறுமாதிரியாக கற்பனை செய்துகொள்ள வேண்டாம். 'பூலோகம் படத்தில் ஜெயம் ரவி பாக்ஸராக நடிக்கிறார். அவரது காதலியாக த்ரிஷா நடிக்கிறார். இப்படத்துக்காகத்தான் ஜெயம் ரவியின் உருவ டாட்டூவை த்ரிஷா வரைந்திருக்கிறார்.



வழக்கமாக காதலி தனது காதலன் பெயரை டாடூவாக எழுதிக்கொள்வார்கள். கொஞ்சம் வித்தியாச்மாக இருக்கட்டும் என்பதற்காக காதலனின் உருவத்தையே காதலி டாட்டூவாக வரைந்திருப்பதுபோல் படமாக்கினோம். இது டூப்ளிகேட் டாட்டூதான். அதனால் எளிதில் அழித்துவிட்டு, ஷூட்டிங் நடக்கும்போது மீண்டும் வரையலாம் என பட யூனிட்டார் தெரிவித்தனர்.

# தலைக்கு - ரஜனியின் படம்



மங்காத்தாவிற்கு பிறகு பில்லா-2 தோல்வியடைந்தபோதும், ஆரம்பம், வீரம் படங்களின் ஹிட் காரணமாக கோடம்பாக்கத்தில் காலறை தூக்கி விட்டு நடக்கிறார் அஜீத். இந்த நிலையில், இந்த வெற்றியை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கும் அவர், புதிய கதைகளை ரொம்ப கவனமாக செலக்ட் பண்ணுகிறார்.

என்னதான் தன்னை வைத்தே ஹிட் கொடுத்த இயக்குனர்களாக இருந்தாலும், கதை தனக்கு பிடிக்க வேண்டும் என்பதை முன்வைத்தே கேட்கத் தொடங்குகிறார் அஜீத். அந்த வகையில், ஏற்கனவே தன்னை வைத்து படம் இயக்கிய விஷ்ணுவர்தன், சிறுத்தை சிவா இரண்டு பேருமே மீண்டும் அவரிடம் கதை சொல்லியிருக்கிறார்கள்.

தற்போது அனேகன் படத்தை இயக்கி வரும் கே.வி.ஆனந்த் சொன்ன கதை அஜித்துக்கு ரொம்ப பிடித்து விட்டதாம். இந்த கதை தான் ரஜினிக்காக அவர் உருவாக்கிய கதையாம். அதனால் கதையில் எந்த திருத்தமும் சொல்லாமல் அப்படியே இருக்கட்டும் என்று ஓ.கே சொல்லி விட்டாராம் அஜீத். மார்ச் இறுதியில் கௌதம்மேனன் இயக்கும் படத்தில் நடிக்கும் அஜீத், அந்த படத்தை முடித்ததும் கே.வி.ஆனந்த் இயக்கத்தில் நடிப்பதை இப்போதே முடிவு செய்துவிட்டார்.

# அப்பா படத்தில் பின்னணி பாடகியாக

கமல் நடித்த தேவர்மகன் படத்தில், இளையராஜாவின் இசையில் போற்றிப்பாடடி பெண்ணே என்று சிவாஜியை புகழ்ந்து பாடும் பாடலில் ஸ்ருதிஹாசனும் குழந்தை குரலில் பாடினார். அதையடுத்து இளையராஜா உள்பட பல இசையமைப்பாளர்களின் இசையிலும், பின்னணி பாடி வந்திருக்கிறார்.

அந்த வகையில, சிறு வயதில் இருந்தே இசையில் அதிக ஈடுபாடு கொண்டவரான ஸ்ருதிஹாசனை, தனது உன்னைப்போல் ஒருவன் படத்தில் இசையமைப்பாளராகவே அறிமுகம் செய்தார் கமல். இருப்பினும், அப்பாவுடன் நடிக்கும் சூழ்நிலைகள் அமையாதபோதும், அவர் நடிக்கும் படத்தில் தனது பங்களிப்பை செலுத்த ஆசைப்படுகிறார் ஸ்ருதி. அதனால் விஸ்வரூபம்-2 படத்தையடுத்து கமல் நடிக்கும் உத்தமவில்லன், த்ரிஷ்யம் ரீமேக் படங்களில் பின்னணி பாடும் வாய்ப்பு கேட்டுள்ளாராம் அவர். விரைவில் கமல் படங்களிலும் பின்னணி பாடுவார் என்று தெரிகிறது.

# சினிமுரசு

## சினிமா குறுஞ்செய்திகள்



- ஆமக்கப்பக்கு அதிக கவனம் கொடுக்கும் கமல்



விஸ்வரூபம் படத்திலும் மாறுபட்ட கெட்டப்பில் நடித்து வரும் கமல் அடுத்து நடிக்கவிருக்கும் உத்தமவில்லன் படத்திலும் தன்னை வித்தியாசப்படுத்தி காட்டப்போகிறாராம். கே.பாலசந்தர் முக்கிய வேடத்தில் நடிக்கும் இப்படத்தில் கமலின் கதாபாத்திரம் வித்தியாசமாக உருவாகியுள்ளதாம்.

- அனிருத்-ஸ்ருதியின் நள்ளிரவு :பன்

மான் கராத்தே படத்துக்காக அனிருத் இசையில் ஒரு பாடல் பாடியுள்ள ஸ்ருதி, ஸ்ருதி நள்ளிரவில் வந்து அந்தப் பாடலைப் பாடிக் கொடுத்தாராம். பாடல் பதிவு முடிந்தபிறகு நீண்ட நேரம் தன் நண்பருடன் மதுவிருந்திலும் பங்கேற்று உற்சாக ஆட்டம் போட்டுவிட்டுப் போனாராம் ஸ்ருதி.



- "உத்தம வில்லன்"

'விஸ்வ'ரூபம் 2' படத்திற்கு பிறகு கமலஹாசன், அவருடைய நண்பரான நடிகர் ரமேஷ் அரவிந்த் இயக்கும் 'உத்தம வில்லன்' என்ற படத்தில் நடிக்கிறார். இப்படத்தின் கதை மற்றும் திரைக்கதையை கமலஹாசன் எழுதியிருக்கிறார். மெகா பட்ஜெட்டில் லிங்குசாமியின் திருப்பதி பிரதர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது.

- 8 பேக்ஸில் புதிய பொலீஸ்

அஜீத், ஜிம்மே கதியாக கிடந்து இதுவரை 7 கிலோ எடை குறைத்துள்ளார். அதுவும் 8 பேக்ஸ் வைக்கிறாராம். படத்தின் கதை மிகவும் பிடித்து போனதால் தனது கால் ஆபரேஷனைக்கூட தள்ளி வைத்து விட்டு முழு மூச்சுடன் போலீஸ் பயிற்சி எடுத்து வருகிறார்.

- சிம்பு அதிர்ச்சியில்

நயன்தாரா வேண்டாம்... ஆண்ட்ரியா வேண்டாம்... ஹன்சிகாவை வர்ணித்து சிம்பு பாடிய பாடல் நீக்கம்

# படிப்பிலும் புலி - மேனன்



கடந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி பரீட்சை எழுதி தேர்ச்சியும் பெற்ற நடிகை லட்சுமி மேனன், இப்போது ப்ளஸ் வன் (தரம் 11) பரீட்சை எழுதுகிறார். நடிப்புக்கு இணையான முக்கியத்துவத்தை படிப்புக்கும் தந்து வருகிறார் லட்சுமி மேனன்.

இவர் நடிக்க வந்தபோது அவர் எர்ணாகுளத்தில் 9ஆம் வகுப்புதான் படித்துக் கொண்டிருந்தார். அடுத்தடுத்து வெற்றிப் படங்களில் நடித்து வந்தாலும், படிப்பை மட்டும் விடவில்லை. கிடைத்த நேரத்தில் படித்து வந்தார். கடந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி தேர்வை எழுதி தேர்ச்சி பெற்றார்.

இந்த ஆண்டு நான் சிகப்பு மனிதன், ஜிகிர்தண்டா, சிப்பாய் போன்ற படங்களில் நடித்து வரும் லட்சுமி மேனன், படிப்பிலும் கவனம் செலுத்தினார். நேற்று அவர் தனது ப்ளஸ் ஒன் தேர்வை எர்ணாகுளத்தில் எழுதினார்.

இதுகுறித்து லட்சுமிமேனன் கூறும்போது, 'சினிமாவை விட படிப்பு தான் முக்கியம். இன்று ஆங்கில தேர்வு எழுதினேன். மொத்தம் ஐந்து பாடங்கள் எழுத வேண்டும். ஒருநாள் விட்டு ஒருநாள் தான் தேர்வு நடக்கிறது. படிப்பதற்கு இடையில் ஒருநாள் விடுமுறை கிடைக்கிறது. தேர்வு முடியும் வரை எங்கும் செல்வதாக இல்லை' என்றார்.

# மீண்டும் தமிழுக்கு வருவாரா இலியானா!!



தமிழில் கேடி என்ற படத்தில்தான் அறிமுகமானார் இலியானா. அனால் அதன்பிறகு தமிழில் படம் இல்லாததால் ஆந்திராவில் கொடி நாட்டினார். அதையடுத்து மீண்டும் தமிழுக்கு வர நினைத்தவர் விக்ரமுடன் ஒரு படத்தில் கமிட்டானார். ஆனால் சில நாள் படப்பிடிப்போடு அந்த படமே கிடப்பில் போடப்பட்டது.

அப்படி வந்தவர் பிரமாண்ட இயக்குனர் 'சங்கர் கண்ணில் பட்டதால் த்ரீ இடியட்ஸ் ரீமேக்கான நண்பன் படத்தில் விஜய்க்கு ஜோடியாக நடிக்கும் மெகா வாய்ப்பினை பெற்றார். ஆக, ரீ-என்ட்ரி அமர்க்கள்மாக இருக்கும் போலிருக்கே என்று ஆரவாரத்துடன் களமிறங்கினார் இலியானா.

ஆனால் இந்த முறையும் முன்னணி ஹீரோக்களுடன்தான் என்ட்ரி கொடுக்க வேண்டும் என்று திட்டமிட்டுள்ள இலியானா, தற்போது ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கும் படத்தில் நடித்து வரும் விஜய், அதற்கடுத்து சிம்புதேவன் இயக்கத்தில் நடிக்கப்போகிறார் என்ற செய்தியை கேள்விப்பட்டு அப்படத்தில் நடிப்பதற்கு தீவிர முயற்சி எடுத்து வருகிறார்.

இன்னமும் கதாநாயகி முடிவு செய்யப்படாத அப்படத்தில் ப்ரியங்கா சோப்ரா ஒரு நாயகியாக நடிப்பதாக செய்திகள் வெளியாகி உள்ள நிலையில், அப்படத்தில் இரண்டு நாயகி என்பதால், அந்த இன்னொரு நாயகி வேடத்தையாவது கைப்பற்றி விட வேண்டும் என்று திரைக்குப்பின்னால் அதிரடி முயற்சிகளில் இறங்கியிருக்கிறார் இலியானா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய கலத்தில் இயங்கும் ஆப்பிள் மடிக்கணனிகள்

அதிநவீன தொழில்நுட்பங்களைக் கொண்ட ஸ்மார்ட் கைப்பேசி மற்றும் டேப்லட் என பல புரட்சிகளை செய்துவரும் அப்பிள் நிறுவனம் தற்போது சூரிய கலத்தில் இயங்கக்கூடிய மடிக்கணினிகளை உருவாக்கவுள்ளது.

மடிக்கணனிகளின் மேற்பகுதியை சூரிய படலங்ளைக் கொண்டு வடிவமைத்து அதன் மூலம் மின்கலத்தில் மின்சக்தியை சேமிப்பதுடன் தொடுகை உணரிகளிலும் (Touch Sensors) மின்சக்தியை சேமிக்கக்கூடியவாறு வடிவமைக்கவுள்ளது.




இது வெற்றிகரமாக அமையும் பட்சத்தில் டேப்லட், கைப்பேசி போன்ற ஏனைய சாதனங்களிலும் இத்தொழில்நுட்பத்தினை பயன்படுத்த முடியும் என அப்பிள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# சீனாவில் HTC Desire 310 கைப்பேசி

HTC நிறுவனத்தின் புதிய தயாரிப்பான Desire 310 ஸ்மார்ட் கைப்பேசி சீனாவில் அறிமுகப்படுத்தப் படவுள்ளதாக உத்தியோகபூர்வ தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இக்கைப்பேசியில் 4.5 அங்குல அளவுடையதும், 480 x 854 Pixel Resolution உடையதுமான தொடுதிரை காணப்படுவதுடன், 1.3GHZ Processor, 512 MB RAM, 4GB சேமிப்பு நினைவகம் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும் Android 4.2.2 Jelly Bean இயங்குதளத்தில் செயற்படக்கூடியதாக இருப்பதுடன் 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்தக்கூடிய VGA கமெரா ஆகியனவும் காணப்படுகின்றன.

# Outlook பயனர்களுக்கான Skype



மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் மின்னஞ்சல் சேவையான Outlook இனைப் பயன்படுத்துபவர்களுக்கான புதிய Skype இடைமுகம் உலகளாவிய ரீதியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

Outlook கணக்கினை வைத்திருப்பவர்கள் தமது கணக்கினைப் பயன்படுத்திவாறே நண்பர்கள், உறவினர்களுடன் ஞமலிந மூலமாக பேசமுடியும். உயர் தர (HD) வீடியோ அழைப்பினை ஏற்படுத்தக்கூடிய வசதியினைக் கொண்டுள்ள இப்புதிய Skype சேவையினை பெறுவதற்கு பிரத்தியேக கணக்கு எதுவும் தேவையில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுப் பையன்

## Windows 8.1 இயங்குதளம் இலவசமாக !!

மைக்ரோசொப்ட் நிறுவனம் புதிய பயனர் இடைமுகமாக மெட்ரோ பயனர் இடைமுகத்துடன் அறிமுகப்படுத்திய Windows 8 இயங்குதளத்தின் பிந்திய பதிப்பே Windows 8.1 ஆகும். இந்த பதிப்பினை கொள்வனவு செய்ய வேண்டுமாயின் அண்ணளவாக 250 டொலர்கள் செலவு செய்ய வேண்டும்.



எனினும் மைக்ரோசொப்ட் நிறுவனம் தனது பயனர்களுக்கு முற்றிலும் இலவசமாக வழங்கும் பொருட்டு மற்றுமொரு Windows 8.1 இயங்குதளத்தினை வடிவமைத்து வருவதாக உத்தியேகபூர்வமற்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

# மனித கொழுப்பிலிருந்து மூக்கு, காது



மனித கொழுப்பில் இருந்து காது, மூக்கு போன்ற ஒறுப்புகளை இங்கிலாந்து மருத்துவர்கள் உருவாக்கியுள்ளனர். பிறவியிலேயே சிலர் காது, மூக்கு இன்றி பிறக்கின்றனர்.

அவர்களுக்காக தற்போது மனித கொழுப்பில் இருந்து மூக்கு, காது போன்ற உறுப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இலண்டனில் உள்ள கிரேட் ஆர்மண்ட் ஸ்டிரீட் மருத்துவமனை மற்றும் யூ.சி.எல் இன்ஸ்டியூட் குழந்தைகள் நல மருத்துவமனையின் மருத்துவர்களும் இணைந்து இந்த சாதனையை படைத்துள்ளனர்.

மேற்கண்ட உடல் உறுப்புக்கள் தேவைப்படும் குழந்தைகளின் வயிற்றின் அடிப்பகுதியில் இருந்து சிறிதளவு கொழுப்பு எடுத்து அதில் இருந்து ஸ்டெம் செல்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன. பின்னர் அவற்றை காது மற்றும் மூக்கு போன்ற வடிவங்களாக வளர்த்து, இரசாயன கலவைகளை அதில் சேர்த்து சவ்வு செல்களாக மாற்றிய பிறகு இறுதியில் தோல் பகுதியில் அதை ஒட்டி உருவாக்கப்படுகின்றது. இதே போன்று மூக்குகளும் தயாரிக்கப்படுகின்றன.

# ஒரு கொலையின் கதை

2-2

ஜனன்

இது ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை....... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.

நீதிமன்றில் அடையாள அணிவகுப்பு நடைபெற்று அவர்கள் இருவரையும் மூன்று சாட்சிகள் அடையாளம் காட்டியிருந்தனர். அத்துடன் முதலாவது பாகம் முற்றிற்று.

இனி..........

அடையாள அணிவகுப்பு நிறைவுபெற்ற பின்னர் அவை தொடர்பான ஆவணங்கள் யாவும் நீதிமற்ற அலுவலர்களால் தயாரிக்கப்பட்டு சேமிக்கப்பட்டன.

அவ் ஆவணங்களில் தெளிவாக குறிக்கப்பட்ட குறிப்புக்களின் படி இரண்டு சாட்சிகள் ஒரு சந்தேக நபரையும், மற்றைய சாட்சி இருசந்தேக நபர்களையும் அடையாளம் காட்டியிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து சந்தேக நபர்களுக்கு மேலும் 14 நாட்களுக்கான தடுப்புத்தரவு வழங்கப்பட்டது.

அந்தப் புலனாய்வு அலுவலகம் மிகவும் சந்தடியாக, பூட்சுக் கால்களின் அதிர்வால் அமைதியற்று இருந்தது. காலை வேளையில் அலுவலகத்திற்கு வருகை தரும் அனைவரும் மற்றைய புலனாய்வு நண்பர்களுக்கு முகமன் கூறுவதும், யாதாயினும் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றை ஞாபகப் படுத்திச் சிரிப்பதும், உயரதிகாரிகளுக்கு "சல்யூட்" அடிப்பதுமாக அன்றை காலை வழமைபோல சந்தடி மிக்கதாக அந்தப் புலனாய்வு அலுவலகத்தில் இருந்தது.

ஒரு மணி நேரக் கழிவில் அமைதியான அந்த அலுவலகத்தில் நான்கு புலனாய்வாளர்கள் அந்த மேசையைச் சுற்றி அமர்ந்திருக்கின்றார்கள். அவர்களின் முன்னே வைக்கப்பட்டுள்ள பத்திரங்களில் அவர்கள் மிகச் சிரத்தையாக எதனையோ தேடி அலைந்து கொண்டிருப்பதாகவே வெளியில் இருந்து பார்க்கும் போது தெரியும்.

புதிய அறைக்குள் புகுந்த எலியொன்று திசை தெரியாது அங்குமிங்கும் ஓடும் விழிககளை அவர்களிகன் முகம் அக்காலை வேளையில் கொண்டிருந்தது.

அன்றைய நாள் ஜூலை 09, 2012, திங்கட்கிழமை. அடையாள அணிவகுப்பின் பின் சந்தேக நபர்களை தடுப்பில் இட்டு மூன்று நாட்கள் கழிந்திருந்தது.

இப்போது சந்தேக நபர்கள் தொடர்பான கவனம் எதுவுமே புலனாய்வாளர்களுக்கு இல்லை. ஏனெனில் கொலை நடந்த நாள் முதல் சந்தேக நபர்களை தமது சந்தேக வட்டத்துக்குள் கொண்டு வந்த பின்னர் கொலைக்காள தகவல்களைத் திரட்டுவதுடன் அச் சந்துேக நபர்களின் நடவடிக்கைகளையும் அவர்கள் கண்ணுக்குத் தெரியாது மறைந்து விடாதபடி இருக்கவும் கண்காணிப்புக்களையும் நுண்புலனுணர்வை இரு முனைகளிலும் செலுத்த வேண்டிய தேவை புலனாய்வாளர்களுக்கு இருந்தது.

தற்போது சந்தேக நபர்கள் கைதாகித் தடுப்பிலிடப்பட்ட பின்னர் புலனாய்வாளர்களின் கவனம் முழுவதும் அடுத்த கட்டநீதிமன்ற நடவடிக்கையை இலக்காகவே கொண்டிருந்த்து.

அதற்கான தயாரிப்புப் பணிகளுக்காகவே ஆளடையாள அணிவகுப்பு முடிவடைந்து மூன்று நாட்களின் பின் புலனாய்வாளர்கள் அங்கு கூடியிருந்தனர்.

கோவைவில் இருந்த பத்தரங்களை அவர்கள் அலசி முடிக்கும் கணத்தில் விறல் மிக்க உதவிக் காவல்துறை அத்தியட்சகர் அவ்வறைக்குள் நுழைந்தார்.

நான்கு கதிரைகள் ஒரு சேரப் பின்னோக்கித் தள்ளப்படும் ஒலி நாராசமாகக் காதுகளுக்குள் புகுந்தது

"குட்மோனிங் சேர்" மிக உறுதியான ஆனால் அலுவலகப் பற்றற்ற சல்யூட் ஒன்றை நால்வரும் வழங்கினர். பதிலுக்கு அவரும் முகமன் கூயித் தனக்காகக் கதிரையொன்றைப் பதபாதகமாக இழுத்து அதனுள் தனது மெல்லிய விறைப்பான உடலைப் புகுத்திக் கொண்டார்.

"சரி...அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்ன?"

உடனடியாக அவர் கடமைகளுக்குள் புகுந்தார்.

" சேர்..... "

அவர்கள் வெள்ளைத் தாள் ஒன்றை அக்காவல்துறை அத்தியட்சகரின் முன் வைத்தனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அத் தாளில் இலக்கமிடப்பட்ட ஒழுங்கில் சில கிறுக்கல்கள் இருந்தன.

அக்கிறுக்கல்கள் அடுத்தகட்ட நடவடிக்கையாக மூன்று வியடங்களை வெளிப்படுத்தியிருந்தன.

முதலாவது விடயமாக சந்தேக நபர்கள் பாவனைக்குட்படுத்திய தொலைபேசித் தொடர்பாடல்களின் வரலாற்றை முழுவதுமாக அறிதல் என்பதாக இருந்தது.

இரண்டாவது விடயம் கொலை நடந்த இடத்தில் இருந்து பெறப்பட்ட இரத்தத் தடயங்களை மரபணுப் பரிசோதனைக்கு (டி.என்.ஏ) அனுப்புதல்.

முன்றாவது பூட்டி காப்பிடப்பட்டுள்ள (சீல்) அலிக வின் அறையைத் திறந்து மேலதிகப் பரிசோதனைகளை மேற்கொள்வது

ஆகியனவையே ஆகும்.

அந்த அடுத்த கட்ட நகர்வுகளை ஏற்றுக் கொண்ட அத்தியட்சகர் அவற்றை எவ்வாறு செய்வது என தனது சட்ட அறிவைப் பயன்படுததிச் சில ஆலோசனைகள் வழங்கினார்.

" இம் மூன்று நடவடிக்கைகளுக்கும் நீதி மன்ற அனுமதி தேவையானது... எனவே நீதிமன்ற அனுமதியைப் பெற்றுக்கொண்டு இவற்றை முன்னெடுக்கலாம் என் நினைக்கின்றேன்" என அவர் கூறி முடித்த கணத்தில் புலனாய்வாளர் ஒருவர் மெதுவாக செருமிக்கொண்டு....

" நீங்கள் சொல்வது சரி சேர்... ஆனால் முதலிரண்டு நடவடிக்கைகளுக்கும் தான் நீதிமன்ற அனுமதி தேவையென்று நான் நினைக்கின்றேன்" என அவர் ஒரு கணம் நிறுத்திக் கொண்டார்

அக்கணத்தில் அனைவரது கவனமும் தமக்கு முன்னிருந்த கோவையில் பிரதியெடுக்கப்பட்டு இணைக்கப்பட்டிருந்த அந்த வெள்ளைக் காகிதத்தில் மூன்றாவதாக இருக்கும் விடயத்தின் மீது பொதிந்தது..

அவ்விடயம் அலிகவின் காப்பிடப்பட்ட அறையைத் திறந்து பரிசோதனைகளைச் செய்வதே. மீண்டும் அவர் பேசத் தொடங்கினார்

"ஏனெனில் சந்தேக நபரின் வீட்டைக் காவல்துறை ஆணைக்கேற்பவே நாம் காப்பிட்டுள்ளோம். எனவே நாம் அவ்வறையைத் திறந்து பரிசோதனையில் ஈடுபட நீதிமன்ற அனுமதி தேவைப்படாது என்றே நினைக்கின்றேன்" என அவர் தெரிவித்தார்.

அனைவரும் சிறிது நேரச் சிந்தனையில் ஆழ்ந்திருக்க அத்தியட்சகர் தனது கைத்தொலைபேசியில் யாரையோ தொடர்ப கொள்ள எத்தனித்தார்...... அந்த அழைப்பு காத்திருப்பில் இருந்தது.... (தொடரும்).

# பாடசாலை விளையாட்டுப் போட்டிகள்




## சஹிர வித்தியாலயம் - சம்மாந்துறை



(எம்.ரீ.எம்.பர்ஹான்)

சம்மாந்துறை வலயத்திற்குட்பட்ட கமு/சது செந்நெல் ஸஹிர வித்தியாலய இல்ல விளையாட்டு போட்டி 2014.02.01 அன்று அதிபர் எம்.ஐ.மீரா முஹைதீன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

இவ் இல்ல விளையாட்டு போட்டியில் சன்(மஞ்சல்), ஸ்டார்(நீலம்), மூண்(பச்சை) ஆகிய அணிகள் கலந்துகொண்டன. இறுதியில் மூண்(பச்சை) அணி முதலிடத்தையும் ஸ்டார்(நீலம்) மற்றும் சன்(மஞ்சல்), ஆகிய அணிகள் முறையே இரண்டாம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இவ்விழாவிற்கு அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.எம்.நௌஷாட், பிரதேச சபை உறுப்பினர் பீ.எம்.மீரா முகைடீன், கிழக்குமாகாண சுகாதார அமைச்சரின் இணைப்புச் செயலாளர் பி.ஜெளபீர், கிழக்குமாகாண அமைச்சரின் பொதுசன மக்கள் தொடர்பு அதிகாரி யூ.எல்.பீர், பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எல்.ஏ.றஹீம், எம்.எச்.எம்.ஜாபிர் சம்மாந்துறை வலய கோட்டக்கல்வி அதிகாரி ஐ.ஏ.றஸுல், உதவிக்கல்விப்பணிப்பாளர் (உடற்கல்வி) ஏ.முஸ்றாக் அலி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீ முருகன் தமிழ் வித்தியாலயம் - சம்மாந்துறை



(எம்.ரீ.எம்.பர்ஹான்)

சம்மாந்துறை வலயத்திற்குட்பட்ட ஸ்ரீ முருகன் தமிழ் வித்தியாலய இல்ல விளையாட்டு போட்டி 2014.02.26 ஆம் திகதியன்று அதிபர் கே.கதிரைநாதன் தலைமையில் ஸ்ரீ முருகன் ஆலய முன்றலில் இடம்பெற்றது.

இவ் இல்ல விளையாட்டுப்போட்டியில் கதிர்தேயன், கஜமுகன் இல்லங்கள் பங்குபற்றி இறுதியில் கார்திகேயன் இல்லம் வெற்றிக்கோப்பையை சுபிகரித்துக்கொண்டது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப்பணிப்பாளர் யூ.எல்.எம்.ஹாசீம், நாவிதன்வெளி கோட்டக்கல்விப்பணிப்பாளர் திரு.என் செல்வநாதன் மற்றும் உதவிக்கல்விப்பணிப்பாளர் (உடற்கல்வி) ஏ.முஸ்றாக் அலி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## அல்ஹிதாயா வித்தியாலயம் - சம்மாந்துறை




(எம்.ரீ.எம்.பர்ஹான்)

சம்மாந்துறை வலயத்திற்குட்பட்ட கமு/சது வீரத்திடல் அல் ஹிதாயா வித்யாலய இல்ல விளையாட்டு போட்டி அண்மையில் அதிபர் எம் எல் பதுதீன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

இவ் இல்ல விளையாட்டு போட்டியில் ஹிறா(சிவப்பு), அறபா(நீலம்), மினா(பச்சை) ஆகிய அணிகள் கலந்துகொண்டன. இறுதியில் அறபா (நீலம்) அணி முதலிடத்தையும் மினா(பச்சை) மற்றும் ஹிறா(சிவப்பு), ஆகிய அணிகள் முறையே இரண்டாம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இவ்விழாவிற்கு அதிதிகளாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம்.ஹாசீம், உதவிக்கல்விப்பணிப்பாளர் (உடற்கல்வி) ஏ.முஸ்றாக் அலி, பிரதி அதிபர்கள், பகுதிப் பொறுப்பாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# விடைபெறும் கிறஹாம் ஸ்மித்



தென்னாபிரிக்க டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் கிரேம் ஸ்மித் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து விடைபெறப்போவதாக அறிவித்துள்ளார்.

சொந்த மண்ணில் நடைபெற்றுவரும் அவுஸ்திரேலிய அணிக்கெதிரான 3 ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெறப்போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண தொடரினையடுத்து சர்வதேச ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற ஸ்மித், தொடர்ந்து டெஸ்ட் போட்டிகளில் விளையாடிவருகிறார்.

இந்நிலையிலேயே, தற்போது தனது நீண்ட கால கிரிக்கெட் வாழ்க்கைக்கு முடிவு கொடுத்து மீதிக்காலத்தை குடும்பத்தாருடன் செலவழிக்க விரும்புவதால் நடைபெற்று வரும் ஆஸி. அணியுடனான டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள்ளார்.

தற்போது தனது 117 ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடி வரும் ஸ்மித் இதுவரையில் 116 டெஸ்ட் போட்டிகளில் 27 சதம் 38 அரைச்சதம் உட்பட 9,257 ஓட்டங்களைப்பெற்றுள்ளார்.

அதிக டெஸ்ட் போட்டிகளுக்கு தலைவராக செயற்பட்டவர் (109 டெஸ்ட்) என்ற உலக சாதனையை படைத்துள்ள ஸ்மித் ஒரு நாள் போட்டியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 434 ஓட்டங்களை "சேஸ்" செய்து தென்னாபிரிக்காவுக்கு வெற்றியை தேடிக்கொடுத்த ஒருநாள் போட்டி அணித் தலைவர் என்ற சாதனையையும் நிகழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆசியக் கிண்ண துடுப்பாட்டப் போட்டிகள்

**01:** இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியின்போது பாகிஸ்தான் அணிக்கு ஆதரவு வழங்கி கோஷங்களை எழுப்பினார்கள் என்ற குற்றச்சாட்டில் 60 மாணவர்களை வட இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகமொன்று இடைநிறுத்தியுள்ளது.

இந்த மாணவர்கள் ஜம்மு மற்றும் காஷ்மீர் பகுதியைச் சேர்ந்தவர்கள் என கூறப்பட்டுள்ளது.

உத்திரப் பிரதேசத்தில் உள்ள பல்கலைக்கழகமொன்றே குறித்த மாணவர்களை இடைநிறுத்தியுள்ளது.

இந்த இடைநிறுத்தமானது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே முன்னெடுக்கப்பட்டதாக பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மன்சூர் அஹமட் தெரிவித்துள்ளார்.

இந்த மாணவர்கள் பாகிஸ்தான் அணியின் வெற்றியைத் தொடர்ந்து இந்தியாவிற்கு எதிரான கோஷங்களை எழுப்பியதன் காரணமாக, பிரச்சினைகள் எழுவதைத் தவிர்க்கும் நோக்கில் அவர்களை மூன்று நாட்களுக்கு இடைநிறுத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், தாம் அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என இடைநிறுத்தப்பட்ட மாணவர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, காஷ்மீரைச் சேர்ந்த பெற்றோர்கள் சிலர் இந்த சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

**02:** விளையாட்டில் தோல்வி என்பது சகஜம் தான், இதற்காக யாரையும் பழி வாங்ககூடாது என கூறியுள்ளார் இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவரான கபில்தேவ்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், இந்திய அணி அனுபவமில்லாத இளம் வீரர்களை கொண்டுள்ளது.

இதனால் வெளிநாடுகளில் வெற்றி பெற சிரமப்படுகிறது, அதிக நெருக்கடியால் முழு திறமையையும் வெளிப்படுத்த முடியாமல் தவிக்கின்றனர்.

விளையாட்டில் தோல்வி என்பது சகஜமானது, இதற்காக யாரையும் பழிவாங்க கூடாது.

2011ல் இந்திய அணி உலக கிண்ணத்தை வென்ற போது டோனியை வெகுவாக பாராட்டினார்கள். ஆனால் சமீபத்திய தோல்விகளால் டோனியை கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

போட்டியில் நெருக்கடியான சமயத்தில் டோனி எடுக்கும் முடிவுகளை, ரசிகர்களால் எடுத்து விட முடியாது. அன்று சிறந்த வீரராக தெரிந்த டோனி, இன்று நேர்மாறாக மாறிவிட்டார்.

தற்போதைய வீரர்களில், யுவராஜ் போல சிறந்த வீரரை பார்க்க முடியாது, அப்படிப்பட்டவரை அணியில் சேர்க்காமல் இருக்கிறார்கள்.

## டெஸ்ட் போட்டிகளுக்கான ஐ.சி.சி தரப்படுத்தல்

தென் ஆபிரிக்காவுடனான கடைசி டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றதால் 115 புள்ளிகளைப் பெற்று அந்த அணி டெஸ்ட் தரவரிசையில் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியது.

இதனால் இரண்டாவது இடத்தில் இருந்த இந்திய அணி மூன்றாவது இடத்திற்கு பின் தள்ளப்பட்டுள்ளது.

வருடந்தோறும் ஏப்ரல் முதலாம் திகதி தரப்படுத்தலில் முன்னிலையில் இருக்கும் அணிகளுக்கு அமெரிக்க டொலர்களில் ஐ.சி.சியால் பரிசுத்தொகை வழங்கப்படும். இதன் படி முதல் பரிசான 475,000 தென் ஆப்பிரிக்காவும் இரண்டாமிடத்திலுள்ள அவுஸ்திரேலியா 370,000 மற்றும் மூன்றாமிடத்திலுள்ள இந்தியா அணி 265,000 பரிசாக பெறும்.

அடுத்த வருடத்திலிருந்து இப்பரிசுத்தொகையை அதிகரிக்க ஐ.சி.சி நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

1. வகுப்பிலுள்ள சகல உயரமான பிள்ளைகளும் பாடசாலைக் கரப்பந்தாட்டக் குழுவில் விளையாடுகின்றனர். பரமனும் பாடசாலை கரப்பந்தாட்டக் குழுவில் விளையாடும் உயரமான மாணவனாவான். அதன்படி பரமன் எனது வகுப்பில் கல்வி கற்கும் ஒரு மாணவனாவான். இக்கூற்று
   (1) சரியானது (2) பிழையானது (3) கூறமுடியாது

2. இக்கட்டிட புனரமைப்புப் பணிகள் எத்தனையாம் ஆண்டு நிறைவு பெறும்?
   (1) 2018 இறுதி வரை (2) 2018 ஆரம்பம் வரை (3) 2018 நடுப்பகுதி வரை

3. முட்கள் உள்ள பழுதடைந்த கடிகாரமொன்று நாளொன்றின்,
   (1) சரியான நேரத்தைக் காட்டும் (2) சரியான நேரத்தைக் காட்டாது
   (3) கூறமுடியாது

4. கீழேயுள்ள பந்தியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.
   ராசுவின் நிறை 10 கிலோக்கிராமை விடக் கூடியதாகும். சுரேஸின் நிறை 40 கிலோக்கிராமை விடக் குறைந்ததாகும். சுதனின் நிறை 25 கிலோகிராமிக்கும் 50 கிலோக்கிராமிக்கும் இடைப்பட்டதாகும். அதன்படி,
   01. மிகக் குறைந்த நிறையுடையவராக இருக்கக்கூடியவர்,
   (1) ராசு (2) சுரேஸ் (3) சுதன்

5. ஒரு பிள்ளையின் நிறை 48 கிலோகிராமாகும். அந்தப்பிள்ளையின் பெயர் யாதாக இருக்கலாம்.
   (1) சுரேஸ் அல்லது ராசு (2) சுதன் அல்லது சுரெஸ் (3) ராசு அல்லது சுதன்

6. ஒரு வட்ட வடிவ மேசையைச் சுற்றி 36 கதிரைகளுக்கும் இலக்கமிடப்பட்டு 36 பேர் அமர்ந்திருந்தனர் எனின், இலக்கம் 8 இற்கு எதிர்பக்கத்தில் அமர்ந்திருப்பவரின் இலக்கம் யாது?
   (1) இலக்கம் 18 (2) இலக்கம் 26 (3) இலக்கம் 16

7. இரவு வேளையில் மின்சாரத்தில் ஒளிரும் மின்குமிழில் படித்துக் கொண்டிருக்கும் போது மின்சாரம் திடீரென தடைப்பட்டது எனின் சிறிது நேரத்திற்கு எமது கண்ணுக்கு
   (1) முழுமையாக இருட்டாக இருக்கும்.
   (2) ஓரளவு வெளிச்சமாக இருக்கும்.
   (3) முழுமையாக வெளிச்சமாக இருக்கும்.

8. போட்டிப் பரீட்சையொன்றில் புள்ளித்திட்டமிடலில் 50 வினாக்களில் சரியான விடைக்கு 2 புள்ளிகள் வீதம் வழங்கப்படும் பிழையான விடைக்கு ஒரு புள்ளி வீதம் கழிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. ராமன் அப்பரீட்சையில் 55 புள்ளிகளைப் பெற்றான் எனின், அவன் சரியாக விடையளித்த வினாக்கள் எத்தனை?
   (1) 25 (2) 35 (3) 45

9. ஐந்து வருடத்திற்கு முன் கரணி, தரணி ஆகிய இருவரது வயதுகளின் கூட்டுத்தொகை 50 ஆகும். இன்னும் ஐந்து வருடங்களுக்கு பின் அவர்கள் இருவரதும் வயதின் கூட்டுத்தொகை எத்தனை?
   (1) 50 (2) 80 (3) 70

10. நேற்றைக்கு முந்திய தினம் சனிக்கிழமை 15 ஆம் திகதி எனின், எதிர் வரும் திங்கட்கிழமை எத்தனையாம் திகதியாகும்?
   (1) 22 ந் திகதி (2) 24ந் திகதி (3) 19ந் திகதி

11. கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிலும் காணப்படும் கூற்று பிழையானதற்கான காரணம் என்ன என்பதை தந்துள்ள மூன்று விடைகளிலிருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

   1) எமது நாட்டின் தேசிய பறவையாகிய மயிலில் பல நிறங்கள் காணப்படுகின்றன.
   (1) எமது நாட்டிற்கு தேசிய பறவை இல்லை.
   (2) எமது நாட்டிற்குரிய தேசிய பறவை மயில் இல்லை.
   (3) மயில் ஒரு பறவை இல்லை.

   2) பாடசாலைகளில் காணப்படும் கழிவுப் பொருட்கள் இடப்படும் நீல நிறப் பெட்டியில் உக்கக் கூடிய பொருட்கள் இடப்படும்.
   (1) பாடசாலையில் உக்கக்கூடிய பொருட்கள் காணப்படுவதில்லை.
   (2) நீலப்பெட்டிகள் காணப்படுவதில்லை.
   (3) நீல நிறப்பொட்டியில் மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய பொருட்கள் இடப்படும்.



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**

**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**



## சிறுவர் முரசு

## சிந்திக்க

- படித்தவனிடம் பக்குவம் பேசாதே, பசித்தவனிடம் தத்துவம் பேசாதே.
- மகான் போல் நீ வாழ வேண்டும் என்றில்லை, மனசாட்சிப்படி வாழ்ந்தால் போதும்.
- உழைப்புக்கு என்றும் மரியாதை உண்டு.
- வாய்ப்பு ஒரு முறைதான் வரும், இனி வாய்ப்பைத் தேட நாம் தான் செல்ல வேண்டும்.
- பகைவரையும் நண்பனாக கருது, பண்பாளன் தான் உலகை வய்ப்படுத்த முடியும்.
- ஆசைகள் வளர வளர அவனுடய தேவைகள் வளர்ந்து கொண்டே போகும்.
- எவ்வளவு குறைவாகப் பேச முடியுமோ அவ்வளவு குறைவாகப் பேசு.
- அதிகம் வீணாகிய நாட்களில் நாம் சிரிக்காத நாட்கள் தான் அதிகம்
- கோபத்தில் வெளிவரும் வார்த்தைகள் அர்த்தமற்றவை.
- மரண பயம் வாழ்நாளைக் குறைத்து விடும்..

## கண்களைப் பாதுகாக்க

அகத்திக் கீரை, பசலைக் கீரை, முருங்கை, பொன்னாங்கன்னி, முளக்கீரை, அரக்கீரை, வெந்தயக் கீரை ஆகிய கீரைகளில் இரும்பு, போலிக் ஆசிட் மற்றும் வைட்டமின் பி-12 ஆகிய சத்துக்கள் அடங்கியிருப்பதால் இவற்றை அதிகம் சேர்த்துக் கொள்வது நல்லது. பச்சைக் காய்கறிகளுடன் சாலட் மற்றும் எலுமிச்சை நம் பார்வையை பெரிதும் கூர்மையாக்குகிறது. வைட்டமின் ஏயில் கண்ணையும், மூளையையும் இணைக்கும் முக்கிய சத்து அடங்கியுள்ளது.

ஜெனி
தரம் 10
புனித மரியாள் கல்லூரி,
திருகோணமலை.



ஜெ.ரீஜக்ஷன்
இ.கி.ச.கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை.



**உங்கள் குழந்தைகளின் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி :**
**மலைமுரசு. இல - 159ஏ,**
**கடற்கரைக் காட்சி வீதி, திருகோணமலை.**

## கை மேல் பலன்

குட்டிக்கதை

அரசன் ஒருவன் சகுனங்களில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவன். அரண்மணை சோதிடர் இந்த நம்பிக்கை மேல் குளிர் காய்ந்து கொண்டிருந்தார். ஒரு நாள் இப்படித்தான் "அரசே, அதிகாலை எழுந்தவுடன் இரண்டு காக்கைகளை ஒன்றாகப் பார்த்தால் நாள் சிறக்கும்" என்று நம்பிக்கை ஊட்டினார்



மன்னன் சேவகனை அழைத்தான். காலையில் எங்காவது இரண்டு காக்கைகள் தென்பட்டால் உடனே தனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கட்டளையிட்டான். அதன் பின் தினமும் பொழுது விடியும் முன்பே சேவகன் தெருவில் அலையத் தொடங்கி விடுவான்.

ஒரு நாள் அரண்மனக்குப் பக்கத்துத் தெருவில் இரண்டு காக்கைகள் ஒன்றாக அமர்ந்திருப்பதைக் கண்டான். "அடடா! நல்ல சகுனம், இன்று மன்னர் நமக்கு நிச்சயம் பதவி உயர்வு கொடுப்பார் என்று மகிழ்ச்சி மிகுதியுடன் மூச்சிரைக்க ஓடி வந்து மன்னரிடம் விபரம் சொன்னான்.

இதைக் கேட்டு துள்ளி எழுந்த மன்னன் சேவகனுடன் அந்த இடத்திற்கு ஓடினான். அதற்குள் ஒரு காக்காய் "வாக்கிங்" போய் விட்டது.

மன்னனுக்கு மூக்கின் மேல் கோபம் வந்து விட்டது. தளபதியை அழைத்து "இந்தப் பொறுப்பற்ற சேவகனுக்குப் பத்து கசையடி கொடு" என்று உத்தரவிட்டான்.

சேவகன் சிரிக்க ஆரம்பித்து விட்டான். "இடுக்கண் வருங்கால் நகுக" என்று படித்துப் புரிந்து வைத்திருந்தவன் போலும். மன்னனுக்கு ஆத்திரம் இன்னமும் அதிகமானது. "நீ சிரித்ததற்கு சரியான காரணம் சொல்லாவிட்டால் இன்னமும் பத்து கசையடி" என்று உறுமினான்.

சேவகன் சொன்னான். "மகா மன்னரே. இன்று நான் மட்டும்தான் அதிகாலையில் இரட்டைக் காக்கைகளைப் பார்த்தேன். கை மேல் பலன் கிடைத்து விட்டது அல்லவா?" என்றான்.

மன்னருக்கு சுருக்கென்று எதோ உரைத்தது. சோதிடர் "எஸ்கேஎஎஎ..ப்" ஆகிவிட்டார்.

## விடுகதைகள்

1. மண்ணுக்குள்ளே கிடப்பான் மங்களகரமானவன் அவன் யார் ?
2. எங்க அக்கா சிவப்பு, குளித்தால் கறுப்பு அது என்ன ?
3. ஆடும் வரை ஆட்டம், ஆடிய பின் ஓட்டம் அது என்ன ?
4. தண்ணியில்லாத காட்டிலே அலைந்து தவிக்கும் அழகி. அவள் யார்?
5. கடல் நீரில் வளர்ந்து, மழை நீரில் மடிவது என்ன ?
6. கொம்பு நிறைய கம்பு அது என்ன ?
7. குண்டுச்சட்டியில குதிரை ஓட்டறான்.
8. பாலிலே புழு நெளியுது. அது என்ன?
9. எழுதி எழுதியே தேய்ஞ்சு போனான். அவன் யார்?
10. பச்சை பெட்டிக்குள் வெள்ளை முத்துகள் ?

### விடைகள்

1. மஞ்சள்
2. மாதுளம்பழம்
3. இதயம்
4. உப்பு
5. அடுப்புக்கரி
6. ஒட்டகம்
7. கரண்டி
8. பாயாசம்
9. பென்சில்
10. வெண்டைக்காய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

1. 7/10 – 5/10 2. 3.5 x 9

3. (+5) + (-1) 4. 3 : 5 = 12 : ……

5. ஒருநிலைத்த புள்ளியிலிருந்து மாறாத்தூரத்தில் அசையும் புள்ளியின் பாதை?

6. ஒரு மணித்தியாலத்திற்கு 120கி.மீ செல்லும் வாகனம், ஒரு நிமிடத்தில் செல்லும் தூரம் யாது?

7. 81 ஐ 3 இன் வலுவில் எழுதுக.

8. Y = -3x + 5 இல் x இன் குணகம் யாது?

9. 3, 5, 7, 9, ……., …....

10. கூட்டுக. 2x + 3x + 5x 11. 8000mg எத்தனை g ஆகும்?

12. 1356 மி.லீ இல் பத்தினிடத்து உள்ள இலக்கம் யாது?

13. சுருக்குக. ( -3) x (-4) x (1-) 14. $(x – y)^2$ இன் விரிவு யாது?

15. நீளம் 5cm, அகலம் x cm உடைய செவ்வகத்தின் பரப்பளவைக் காண்க.

16. காரணிப்படுத்துக. 6ac - 2cy + 3a - y

17. ஒரு செவ்வக வடிவ காணியின் நீளம் 20m உம் அகலம் 15m உம் ஆகும் இக்காயினை சுற்றி $74m^2$ பரப்புடைய xm அகலமுடைய பாதையொன்று இருப்பின்,

அ. x இல் ஓர் இருபடிச் சமன்பாட்டை உருவாக்குக.

ஆ. அதிலிருந்து பாதையின் அகலத்தைக் காண்க.

18 கூட்டல் விருத்தியொன்றின் 3 ஆம் உறுப்பு 18உம், 9 ஆம் உறுப்பு 42 உம் ஆகும். இவ்விருத்தியின்

அ. முதலுறுப்பு யாது

ஆ. பொது வித்தியாசம் யாது?

இ. இக் கூட்டல் விருத்தியின் 4 ஆம் உறுப்பினதும் 10 ஆம் உறுப்பினதும் கூட்டுத்தொகை 7ஆம் உறுப்பின் இரு மடங்காகும் எனக் காட்டுக.

19. ஒருவர் ஒரு வாரத்தில் தன்னிடமுள்ள பணத்தின் பகுதியை உணவுக்காகவும் மீதியின் பகுதியை பிரயாணத்திற்காகவும் செலவிட்டார். எஞ்சியதை சேமிப்பில் இட்டார். எனின்,

அ. உணவுக்காக செலவிட்டபி மீதியாக உள்ள பகுதி

ஆ. பிரயாணத்திற்கு செலவிட்ட பகுதி மொத்த பணத்தின் என்ன பின்னம்?

இ. சேமிப்பில் இட்ட பகுதி

ஈ. சேமிப்பில் இட்ட தொகை ரூபா 800 எனின், அவ்வாரம் அவர் வைத்திருந்த பணம் எவ்வளவு?

20. கணி கருவி ஒன்றை ரூபா 672 ற்கு விற்பதால் 12 வீதம் இலாபம் கிடைதத்தெனின்,

அ. அதன் கொள்விலை யாது?

ஆ. 10 வீதம் நட்டம் ஏற்பட விற்கப்பட்டிருப்பின் கணி கருவியின் விற்ற விலை யாது?

## சென்ற வார விடைகள்

1. 22.454 2. x = 5

3. m/10 4. (-8)

5. 8x/20 = 2x/5 7. 1030ml

8. $A^1 = \{1, 2, 4\}$

9. 10 10. வர்க்கமூலம் 5

11. 6cm 12. x = 2

13. அ. m = 1/5 ஆ. y = 1/5x - 1

14. 2 (x+2) (x-2) 15. 18

16. 01 17. 08

18. அ. 13 ஆ. 68 இ. 5n-17

19. அ. 7.9 ஆ. 7.85

20. 24 21. ரூபா 35

**கணிதம் வழிகாட்டல் -**
**திருமலையின் பிரபல ஆசிரியர் T.குமணன்**

**MATHS**
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
**T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
G.C.E (O/L) பிரதி சனி தோறும்
பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.

## பாடம் : வரலாறு

1. இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் பிரதான எழுத்து மூலாதாரம்
   1. தீபவம்சம் 2. சூளவம்சம் 3. மகாவம்சம் 4. தாதுவம்சம்

2. திரிபீடகம் தொகுக்கப்பட்டுஎழுத்துவடிவம் பெற்ற இடம்
   1. கல்விகாரை 2. அலுவிகாரை 3. ஜேத்தவனராமய 4. திஸ்ஸமகாராம

3. புவியியலின் அமைப்புக் காரணமாகநிலைபெற்ற இராசதானி
   1. அநுராதபுர 2. பொலநறுவை 3. கண்டி 4. சீதாவாக்கை

4. பின்வருவனவற்றுள் தொல்பொருள் மூலாதாரமாககருதமுடியாதது
   1. அம்பகமுகல்வெட்டு 2. வெஸ்ஸகிரிகல்வெட்டு
   3. சமந்தபாஸாதிகாவ 4. கல்பொத்த

5. வல்லிபுர பொற்சாசனம் மூலம் வெளிப்படும் விடயம்
   1. விஜயபாகு காணிகளை பகிர்ந்தளித்தமை
   2. வசபனின் சுரங்கவழி நீர்ப்பாசனம்
   3. வசபமன்னனின் நாகதீப ஆட்சிப் பரம்பல்
   4. மகாசேனனின் நீர்ப்பாசன திட்டப்பணி

6. 1. மல்வத்துஓயா A உருவெலகம
   2. கலாஓயா B அனுராதகம
   3. கிரிந்திஓயா C மகாகம
   4. மாணிக்ககங்கை D கஜரகம

   நதிக்கரைகளில் தோற்றம் பெற்ற குடியேற்றங்களின் ஒழுங்கு
   1. ABCD 2. BCAD 3. BACD 4. CBAD

7. ஆரியர் இந்தியாவில் குடியேறியமுதல் பிரதேசம்
   1. சப்தசிந்து 2. கங்கைச்சமவெளி
   3. விந்தியமலைத் தொடர் 4. இமாலயம்

8. ஆரியரின் சமூகஅமைப்பில் சத்திரியரால் ஆற்றப்பட்டபணிகளுள் பொருத்தமற்றது
   1. நாட்டின் நிர்வாகத்தை முன்னெடுத்தல்
   2. அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டு மக்களை பாதுகாத்தல்
   3. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
   4. கல்வி கற்பிக்கும் நடவடிக்கையில் ஈடுபடல்

9. A. மூன்றாவதுபௌத்தபேரவைமாநாட்டைக் கூட்டல்
   B. மகாயானபௌத்தத்தைசீனாவில் பரப்புதல்
   C. சாஞ்சி தூபிஉட்படபல தூபிகளைஅமைத்தல்
   D. நீலராஜன்,ஹஸ்திவர்மன் போன்றோரைதோற்கடித்தல்

   மேற்படிவிடயங்களுள் மௌரியர் காலநிகழ்ச்சி
   1. AB 2. AC 3.CD 4. BD

10. மகாராஜாதிராஜா என்றபட்டத்தைபெற்றுக் கொண்டகுப்தபேரசின் முதல் மன்னன்
    1. சந்திரகுப்தன் 2. சமுத்திரகுப்தன் 3.சந்திரகுப்தமௌரியன்
    4. குமாரகுப்தன்

11. இறந்தவர்களுக்கான மரணச்சடங்கு சம்பிரதாயங்கள் தொடர்பான தகவல்கள கிடைக்கப் பெற்ற இடங்கள்
    1. கித்துல்கல, பாகியன்கல, பட்டதொம்ப
    2. பட்டதொம்ப, அலுலென, பெல்லன்பதிபெல்லச
    3. பாகியன்கல, நில்கல, பெலிகல்கே
    4. இராவணன் எல்ல, நில்கல, கித்துல்கல

12. இலங்கையில் மகாவலி ஆறு சங்கமிக்கும் இடத்தில் அமையப் பெற்றதுறைமுகம்
    1. உருவெல 2. கோகண்ண 3. ஜம்கோளப்பட்டினம்
    4. கொடவாய

13. 1. எல்லாளன் A - அசேலன்
    2. சேனன்-குத்தின் B - 2ஆம் பராக்கிரமபாகு
    3. கலிங்கமன்னன் C - வலகம்பா
    4. தாதிகன் D - துட்டகைமுனு

    மேற்படி அந்நிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நாட்டை மீட்டவர்களின் சரியான ஒழுங்கு
    1. ABDC 2. DABC 3. DACB 4. CDAB

14. இலங்கையில் அமைக்கப்பட்ட மிகப் பெரிய தூபி
    1. ருவன்வெலிசாய 2. மிரிஸவட்டிய 3. அபயகிரி
    4. ஜேத்தவனாராமய

15. கலிங்கமாகனிடமிருந்து பாதுகாப்புப் பெற பிரதேசஆட்சியாளரான சங்க என்பவனால் அமைக்கப்பட்ட நிலையம்
    1. மினிப்பே 2. கோவிந்தமல 3. யாப்பகூவ 4. தம்பதெனியா



ஆசிரியர் :
த.அகிலன், Dip. in. Tech. (Merit)
புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை.
சுடர் ஒளி வெற்றிப்படி ஆசிரியர்,
ஆறுதல் நிறுவன வரலாற்றுப் பாட ஆசிரியர்

**பிரதி சனிக்கிழமை தோறும் காலை 6 – 7 மணிவரை தரம் 6, 7, 8 மாணவர்களுக்கான வரலாறு, புவியியல் பாடங்களுக்கு வெற்றிப்படி பரீட்சை நடைபெறும்**

**இந்த வாரப் பரீட்சையில் வெற்றியடைந்த மாணவர் படங்கள் அடுத்தவாரம் வெளியாகும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கில் ஆட்சி .....

எதிர்வரும் சில மாதங்களுக்குள் அந்த இரண்டரை வருடகாலம் நிறைவுறுகின்றது......
என்பதை கருத்திற் கொண்டுள்ளது. முதலமைச்சர் பதவியைக் குறிவைத்து தற்போது கிழக்கு மாகாண சபையில் உள்ள மு.காவின் அமைச்சர்கள் செயற்படுவதாக தெரிகின்றது.
மத்தியில் கூட்டணி உடையுமானால் கிழக்கிலும் கூட்டணி தளம்பலடையும் சாத்தியங்கள் காணப்படுகின்றன

இவ்வாறு " வெளியே போ" என்ற தொனியிலான பேச்சையடுத்து அதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு முஸ்லிம் காங்கிரஸின் அதிருப்திக் கட்சிகள் "தன்மானமில்லாத் தலைமைத்துவத்தினால் முஸ்லிம் காங்கிரஸ் செல்லாக் காசாகி விட்டது எனப் பேசத் தொடங்கியுள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்தைப் பார்த்து ஜனாதிபதி கெட் அவுட் "வெளியே போ" என்று சொல்லியும் வெட்கமில்லாமல் கூனிக் குறுகி அந்தக் கதிரையிலேயே இருக்கின்றதொரு தலைமைத்துவத்தையே நாம் காண்கின்றோம் என அமைச்சர் ரிசாத் பதியுதீன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கொழும்பு மீராணியா வீதியில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், மறைந்த தலைவர் அஸ்ரப் அவர்களின் தலைமைத்துவம் ஒரு தன்மானம் உள்ளதொரு தலைமைத்துவமாக இருந்தது. அந்த தலைமைத்துவத்தை கண்டால் அன்று இருந்த ஜனாதிபதியோ, பிரதமரோ மிகவும் கண்ணியமாகவும் மரியாதையாகவும் நடந்து கொண்டனர். அவரைக் கண்டால் எழும்பி மரியாதை கொடுப்பார்கள். ஆனால் தற்போதைய முஸ்லிம் காங்கிரஸ் செல்லாக் ,காசாக மாறிவிட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

## தமிழ் மக்களை....

எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜெனீவா சென்று இறங்கியதுமே பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், நான் விடுதலைப் புலிகளது முக்கிய போராளியான எழிலனின் மனைவி என்பதால் என்னையும் சர்வதேச பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் போராளியாகவே பார்ப்பார்களென தெரிவித்ததுடன் என்னை ஏதும் பேச வேண்டாமெனவும் தானே எல்லாவற்றினையும் பேசுவதாகவும் தெரிவித்தார்.

வட மாகாணசபையில் சர்வதேச போர்க்குற்ற விசாரணை வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் அங்கு வட மாகாணசபை சார்பில் என்னையே ஜெனீவாவிற்கு அனுப்புவதென தீர்மானிக்கப்பட்டிருந்தது. இவ்வகையினில் தமிழரசுக்கட்சியின் அனுசரணையுடன் நான் பல்வேறு சிரமங்களிற்கு மத்தியில் ஜெனீவா சென்றிருந்தேன்.

இவ்வாறன ஒரு நிகழ்ச்சி நிரலில் தான் அவர் என்னை அங்கு அழைத்து சென்றிருப்பார் என முன்கூட்டியே தெரிந்திருந்தால் நான் நிச்சயமாக அங்கு சென்றிருக்க மாட்டேன்.

18 நாட்டு ராஜதந்திரிகளுடன் கடந்த பெப்ரவரி 13ல் இடம்பெற்ற ஜெனீவா சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் போர்குற்ற விசாரணை தொடர்பாகவோ இன அழிப்பு தொடர்பாகவோ ஏதும் பேசியிருக்கவில்லை.

என்னையும் அது தொடர்பாக பேச விடவில்லை. வெறுமனே வேடிக்கை பார்க்கும் நபராக நான் அங்கு இருந்தேன். குறுக்கிட்டு அங்கு என்னால் பேசியிருக்க முடியுமாயினும் ராஜதந்திரிகளிடையே கௌரவத்தினை மதித்து தான் நான் பேசாது இருந்தேன் என அனந்தி மேலும் தெரிவித்தார்.

## மக்களைத் திரட்டிப் ....

அடாவடியாக மேற்கொண்டுவரும் பௌத்த தேரருக்கு எதிராகவும் மட்டக்களப்பு மாவட்ட மக்களை ஒன்றுதிரட்டி போராடவேண்டிய சூழ்நிலையேற்படும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

பட்டிப்பளை பிரதேச செயலாளரை இடமாற்றுமாறு கோரிக்கை விடுவதற்கு மட்டக்களப்பு மங்கலராமய விகாராதிபதி அம்பிட்டியே சுமங்கள தேரருக்கு எந்த அருகதையும் இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் சிங்கள ராவய அமைப்பின் மூலம் செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணி தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## சீனப் பெண் புறாமலையில் மரணம்



புறாமலையில் நீராடச் சென்ற சீனப் பெண் உல்லாசப் பயணி நீரில் மூழ்கி மரணம் அடைந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை இத் துயரச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

டியர்ன் யிங் என்ற 22 வயதான சீனப் பெண்ணே மரணம் அடைந்துள்ளார்.

கடந்த வாரம் திருகோணமலைக்கு வருகை தந்துள்ள இவர் சீனத் தம்பதிகளுடன் புறாமலைக்கு வந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஒப்புதல் வாக்கு....

நானே கண்காணித்தேன், நானே வழிப்படுத்தினேன், நானே மேற்பார்வை செய்தேன் இறுதியாக நானே கட்டளைகளைப் பிறப்பித்தேன் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

எனினும் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் படையினரிடம் சரணடைந்தவர்கள் காணாமற்போனமை தொடர்பாக சரத் பொன்சேகாவிடம் முன்னொருபோது ஊடகவியலாளர் வினவிய போது யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தான் நாட்டிலேயே இருக்கவில்லை என்றும் அவ்வாறு நடைபெற்றிருந்தால் அதற்குத் தான் பொறுப்பானவர் அல்ல என்றும் முன்நாள் இராணுவத் தளபதி தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச விசாரணை..

பல மனித உரிமை நடவடிக்கையாளர்கள் கையெழுத்திட்டு இந்தக்கோரிக்கையை அனுப்பி வைத்துள்ளனர்.

அதில் இலங்கையின் இறுதிப் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகளுக்காக ஒரு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

அதுவே இலங்கையில் நல்லிணக்கத்தையும் நீதியையும் ஏற்படுத்தும் என்று கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கையின் போர் முடிந்துவிட்டதாக கூறப்படுகின்ற போதும் இன்னும் மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்வைக்கப்படவில்லை. ஜனநாயக பண்புகள் மறுக்கப்படுகின்றன.

மனித உரிமைகள் தொடர்ந்தும் மீறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தநிலையில் போர்க்காலத்தை காட்டிலும் நிலைமை மோசமடைந்துள்ளதாக டுட்டு குழுவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வெளிநாடுகளின் தலையீடு அவசியமில்லை என அதி வணக்கத்திற்குரிய கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். தாய்நாட்டை மீளக் கட்டியெழுப்புதல், பாதுகாத்தல் மற்றும் வளர்ச்சியடையச் செய்தல் அனைவரினதும் கடமையாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.சில நாடுகள் இலங்கை மனித உரிமை தொடர்பில் சர்வதேச விசாரணைகளை கோரி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் எந்தவொரு பிரஜையாவது உள்நாட்டுப் பிரச்சினைகளை வெளிநாட்டுக்கோ அல்லது வெளிநாட்டுப் பிரச்சினைகளை உள்நாட்டுக்கே எடுத்துச் செல்லவோ கொண்டுவரவோ முயற்சிக்கக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறான முனைப்புக்களின் மூலம் வெற்றியாளர்கள் எவரும் இருக்கப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இறைமையுடைய நாடு ஒன்றின் மீது சர்வதேச விசாரணைகள் மூலம் தலையீடு செய்வதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். சுயாதீனமான நாடு ஒன்றின் மீது சர்வதேச சமூகம் பலவந்தமான முறையில் தலையீடு செய்யக் கூடாது என மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

## சைவக்குருமாருக்கும் ஓய்வீதியம்

(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)

சைவ சமய கருத்துக்களையும், அதன் தொன்மைகளையும் மக்களுக்கு எடுத்துச் செல்லும் வழிகாட்டிகளாக திகழும் குருமார்களுக்கு ஓய்வூதியத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படுவதற்கான முன்யோசனைகளை முன்னாள் முதல்வர் சி.சந்திரகாந்தன் முன்னெடுத்து வருகின்றார். இது விரைவில் திட்ட வரைபுகளுக்கும் சட்டதிட்டங்களுக்கும் அமைவாகவும் அமுல்படுத்தப்படவேண்டும் என "நாம் இந்துக்கள்" அமைப்பின் தலைவர் பூ.பிரசாந்தன் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாண குருமார்களுக்கான வேதாகமப் பாடசாலையினை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் அதிதியாக கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

## பாரதிபுரம் கடை....

தமிழருக்குச் சொந்தமான கடைகளில் கைத்தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகளும், வெண்சுருட்டுக்களுமே கொள்ளையிடப் பட்டுள்ளதாகவும் கடையில் இருந்த பொருட்கள் விசிறி எறியப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது. அவ்வாறே முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான கடை உடைக்கப்பட்டு அங்கிருந்து எரிவாயுத் தாங்கியொன்று (காஸ் சிலிண்டர்) எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களைப் பயப்பீதிக்குள் உள்ளாக்கும் நடவடிக்கையாகவே இக் கொள்ளைகள் நிகழ்வதாக அங்கிருக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பூர், கடற்கரைச்சேனை மக்களை மீள் குடியேற்றம் செய்யவுள்ள இடங்கள் எவை என்பதைக் காட்டுவதற்காக, தண்ணீர் வசதி எதுவுமில்லாத சிறுகாட்டுப் பகுதிகளான வள்ளிக்கேணி, பாட்டாளிபுரத்திற்குச் செல்லும் வழியிலுள்ள வேம்படித் தோட்டம், சின்னக்குளம் போன்ற பகுதிகளைக் காட்டியபோது மக்கள் அப் பேருந்துகளில் இருந்து இறங்கி இவ்வாறான இடங்களில் எம்மால் வாழவே முடியாது என்பதைத் தெரிவித்ததுடன் தம்மை மீண்டும் சம்பூரில் தமது நிலங்களில் குடியேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்" எனத் தெரிவித்தார். கல்லுச் சார்ந்த நிலங்களாக அவை இருப்பதால் தோட்டங்களோ விவசாயமோ செய்ய முடியாத இடங்களாக அவை இருக்கின்றன் எனத் தெரிவித்த அவர் செழிப்பான நிலங்கள் எனில் இன்றுவரை அவ்வனாந்தரப் பிரதேசங்களில் மக்கள் குடியேறாமல் விட்டிருப்பார்களா? என்ற கேள்வியையும் எழுப்பினார். சொந்த நிலத்திலிருந்து இடம்பெயர்க்கப்பட்டுள்ள அம்மக்களிற் கணிசமானோருக்கு வாழ்வாதாரத் தொழிலாக இருந்த கட்டுவலைக்குத் திடீரென கடற்படையால் விதிக்கப்பட்ட தடையை அடுத்து அம்மக்களின் வாழ்வாதாரம் பாதிப்புக்குள்ளாகியது.

அதனைத் தொடர்ந்து வலைவிரிக்கப்படும் கடற் பிரதேசத்தில் சிறியதொரு பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு கட்டுவலை வீச அம் மக்களுக்குக் கடற்படை அனுமதியளித்துள்ளது.

## கிழக்குப் பல்கலைக்கழகத்தில்...

பல்கலைக்கழகத்தில் ஆசிரியர் சங்கம் என்ற பெயரில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் சிறு குழுக்களின் நடவடிக்கைகளில் அதிருப்தியுற்ற 101 விரிவுரையாளர்கள் அதில் இருந்து விலகி உயர் கல்வி அமைச்சு கடிதம் அனுப்பியுள்ளார்கள்.அதேபோன்று சில தினங்களுக்கு முன்னர் சிலர் மேற்கொண்டுவரும் குழப்ப நிலை தொடர்பில் சகல பீடாதிபதிகளும் கையெழுத்திட்டு கடிதம் எழுதியுள்ளனர்.

ஆசிரியர்கள் சங்கம் என்று கூறிக்கொள்பவர்களிடம் 13 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனஒரு சிலர் பல குழப்பங்களை ஏற்படுத்திவருகின்ற நிலையிலும் அவற்றினையெல்லாம் தாண்டி நாங்கள் எமது பணியை மேற்கொண்டுவருகின்றோம்.

இந்த நாட்டில் இந்த மாகாணத்தில் பிறந்தவன் வழந்தவன் என்ற அடிப்படையில் எனக்கு இந்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.நான் பிறந்து வளர்ந்த மண்ணுக்கு சேவையாற்ற எனக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.வெளிநாட்டு பிரஜையொருவர் உபவேந்தராக பதவி வகிக்கமுடியாது என்று எந்த சட்டமும் இல்லை. என்னை ஜனாதிபதியே இந்த உபவேந்தராக நியமித்துள்ளார்.இது சட்டத்துக்கு முரணான விடயமாக இருந்தால் இது நடந்திருக்காது..நான் எந்த பிரதேசவாதமும் பல்கலைக்கழகத்தில் பார்ப்பதில்லை. பீடாதிபதிகள் நியமனத்தில் கடந்த காலத்தில் பல பாதிப்புகளை எதிர்கொண்ட யாழ்ப்பாணத்தினை சேர்ந்தவரையும் நியமித்துள்ளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## - சிறுமி தற்கொலை -

திருகோணமலை குச்சவெளி பிரதேசத்திற்குட்பட்ட இறக்கக்கண்டி பகுதியைச் சேர்ந்த சித்தி ச:.பானியா என்னும் 17 வயது சிறுமி பாடசாலை விளையாட்டுப் போட்டியைக்காண அனுமதிக்காததால் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

சிறுமியின் தந்தை அமிர்தீன் (வயது45) தெரிவிக்கையில் "கடந்த 27.02.2014 அன்று இறக்கக்கண்டி மகாவித்தியாலயத்தில் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளை பார்க்க தனது தோழியுடன் செல்ல ச:.பானியா கேட்டார். நான் தனது உறவினரின் மகளுடன் செல்லுமாறு பணித்தேன். அதனால் கோபத்தில் அழுதுகொண்டு வீட்டின் அறைக்குள் சென்று உறங்கிக்கொண்டிருந்தார்.

நான் வெளியில் சென்று மாலை 5.30 மணியளவில் வீட்டிற்கு திரும்பி வந்து வீட்டின் அறை மின்விளக்கை போட்ட போது தான் எனது மகள் தூக்கில் தொங்கியது தெரிந்தது" எனத் தெரிவித்தார்.
(அனுர-உதயா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குர் ஆனின் பரிந்துரைகள்

- நீங்கள் குர்ஆனை ஓதுங்கள். நிச்சயமாக அது நாளை மறுமையில் அதை ஓதியவருக்கு "பரிந்துரை" செய்யும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)
- குர்ஆனை ஓதி அதன்படி அமல் செய்தவரையும், குர்ஆனையும் நாளை மறுமையில் கொண்டு வரப்படும், குர்ஆனின் இரண்டு சூராக்கள் அல்பகரா, ஆலு இம்ரான் முன் வந்து அந்த இரண்டையும் ஓதியவருக்காக அல்லாஹ்விடத்தில் வாதாடும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)
- உங்களில் சிறந்தவர், குர்ஆனைக் கற்று அதை பிறருக்கு கற்றுக் கொடுத்தவர் என கூறினார்கள். (ஆதாரம்: புகாரி)
- குர்ஆனை உரிய முறையில் ஓதி அதன் படி செயல்பட்டவர் நாளை மறுமையில் சங்கையான உயர்ந்த மலக்குகளுடன் இருப்பார். கஷ்டப்பட்டு திக்கித் திக்கி ஓதுபவருக்கு இரண்டு மடங்கு கூலி கிடைக்கும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: புகா்ரி, முஸ்லிம்)
- அல்லாஹ்வுடைய வேதத்திலிருந்து (குர்ஆனிலிருந்து) யார் ஒரு எழுத்தை ஓதுகின்றாரோ, அவருக்கு ஒரு நன்மை கிடைக்கும். ஒரு நன்மை செய்தால், அது பத்து மடங்கா க்கப்படும். அலி∴ப், லாம், மீம் என்பது ஒரு எழுத்து என்று நான் கூற மாட்டேன். ஒரு எழுத்தாகும். லாம் என்பது ஒரு எழுத்தாகும், மீம் என்பது ஒரு எழுத்தாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: திர்மிதி)
- "எவருடைய உள்ளத்தில், குர்ஆனில் கொஞ்சம் கூட மனனம் இல்லையோ, அவருடைய உள்ளம் பாழடைந்த வீட்டைப்போல்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: திர்மிதி)

# பெண்களும் அவர்களின் நோன்பும்

திக்ர், ஸலவாத்து, அல்குர்ஆனை ஓதுதல் போன்ற வழமையான இபாதத்துக்களில் அவர்கள் ஈடுபடலாம்.

கடந்த வார தொடர்ச்சி...

நோன்பை மட்டும் தவிர்க்க வேண்டியது தான் பாக்கி. அதனால் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படப் போவதுமில்லை: குற்றம் பிடிக்கப் போவதுமில்லை. எனவே, இவ்வழிமுறையை நாம் கைவிட்டு இயற்கை வழியிலேயே செயற்படுவோமாக.

விடுபட்ட நோன்புகளை அடுத்த றமழான் வருவதற்கு முன்னர் கழாச் செய்திட வேண்டும். அவற்றைத் தொடர்ச்சியாகச் செய்ய வேண்டும் என்ற அவசியமுமில்லை. தனித்தனியாக வசதிப்படி நோற்றுக் கொள்ளலாம். அப்படி நோற்பதாயின் வெள்ளிக் கிழமை மட்டும் தனியாக நோற்பதைத் தவிர்க்க வேண்டும்.

நபி(ஸல்) அவர்களுடைய காலத்தில் றமழான் மாதத்தில் ஸஹருடைய ஒரு அதானும் சுபுஹடைய ஒரு அதானும் கூறப்படும். இது குறித்து நபி(ஸல்) அவர்கள், 'பிலால் இரவில் (உங்களை விழிப்படையச் செய்வதற்காக) அதான் கூறுவார். நீங்கள் உம்மி மக்தூம் (சுப்ஹடைய) அதான் கூறும் வரை உண்ணுங்கள் எனக் கூறினார்கள்' (அறிவிப்பவர்: ஆயிஷா(ரழி), ஆதாரம்: இப்னு குஸைலமா-1932)

### கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார்கள் மூதாட்டிகள்



கர்ப்பிணிப் பெண்களும், பாலூட்டும் தாய்மார்களும் தமக்கோ, தமது குழந்தைக்கோ பாதிப்பு ஏற்படலாம் என அஞ்சும் நிலையிருந்தால் நோன்பை விடலாம். அவ்வாறே வயோதிப ஆண், பெண் இரு சாராரும்கூட நோன்பை விடலாம். தாம் நோற்காத ஒவ்வொரு நோன்பிற்கும் பரிகாரமாக ஒரு ஏழைக்கு உணவளிக்க வேண்டும். இவர்கள் பித்யா வழங்கப்பட்ட இந்த நோன்பை மீண்டும் கழாச் செய்ய வேண்டியதில்லை.

இந்த சலுகையை அறியாத பலர் தம்மைத் தாமே சிரமப்படுத்திக் கொள்கின்றனர். சட்டம் தெரியாததால் ஒரு நோன்பிற்கு ஒரு ஏழைக்கு உணவு என்ற பரிகாரத்தை நிறைவு செய்வதுமில்லை. பித்யா கொடுக்கும் இவ்வழக்கத்தை நடைமுறைப்படுத்தினால் இதன் மூலம் நோன்பு காலத்தில் அனேக ஏழைகளுக்கு உணவு போய்ச்சேர வழிபிறக்கும்.

### இல்லறத்தில் ஈடுபடுதல்

நோன்புடன் இருக்கும் போது தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியுமென்றால் முத்தமிடுவது குற்றமில்லை. இரவு நேரத்தில் இல்லறத்தில் ஈடுபடுவதிலும் எந்தத் தவறும் இல்லை. இதனை 'நபி(ஸல்) அவர்கள் நோன்புடன் இருக்கும் போது (தமது மனைவியை) முத்தமிடுவார்கள்' (புஹாரி, முஸ்லிம், திர்மிதி, இப்னுமாஜா, தாரமி) என்ற நபிமொழியும்



'நோன்புடைய இரவில் உங்கள் மனைவியருடன் (வீடு) கூடுவது உங்களுக்கு ஆகுமாக்கப்பட்டுள்ளது' (2:187) என்ற வசனமும் உணர்த்துகின்றது. இல்லறத்தில் ஈடுபட்டாலும் இது தவறாகுமோ என்ற அச்சம் அல்லது இதனால் நோன்பின் பயன் குறைந்து விடுமோ என்ற கவலையும் பெண்களிடம் உள்ளது. இதனால் குளிப்புக் கடமையான நிலையில் விழிப்போர் அதே நிலையில் நோன்பைக் கூட நோற்கலாம். தொழுகைக்காகத்தான் அவர்கள் குளித்துக் கொள்ள வேண்டும் என்பதை நாம் ஏற்கனவே குறிப்பிட்ட நபிமொழிகளின் மூலம் உணரலாம்.

முற்றும்




# முகம் பளபளக்க ஈஸி டிப்ஸ்



நமது சமையலில் முக்கிய இடம்பெறும் தேங்காய், நமது தேகத்தை அழகாக வைத்துக்கொள்ளவும் உதவுகிறது. தலை முதல் பாதம் வரை மென்மை, பளபளப்பை தாராளமாய் அள்ளித்தரும் தேங்காய், நம்மை தன்னம்பிக்கையுடன் நடைபோட வைக்கும் என்பதில் மாற்றுக்கருத்தே இல்லை.

- வழுக்கை தேங்காயை நன்கு அரைத்து, அதனோடு சிறிதளவு இளநீர் கலந்து முகத்தில் கீழ் இருந்து மேல்நோக்கி பூசி, அது உலர்ந்ததும் நீர் கொண்டு சுத்தம் செய்துகொள்ள வேண்டும். தினமும் இப்படி செய்து வந்தால் மாசு மருவின்றி முகம் மிளிரும். கரும் புள்ளிகள் இருந்தால் கூடிய விரைவில் அவை காணாமல் போய்விடும்.
- வெயில் காலங்களில் சூரியஒளி பட்டு முகம் கருப்பாவது வழக்கம். பலருக்கு வெளியூர் சென்றால்கூட இது போன்ற நிலை ஏற்படும். முகம் கருப்பாவதை தடுக்கவும் தேங்காய் உதவுகிறது. தேங்காய் பால் 2 ஸ்பூன், கடலை மாவு ஒரு ஸ்பூன் எடுத்து, இரண்டையும் கலந்து பசைபோல ஆக்கிக்கொள்ள வேண்டும். இந்த பசையை முகத்தில் பூசிக்கொண்டு, உலர்ந்ததும் தண்ணீர் கொண்டு கழுவிவிட வேண்டும். வாரம் இருமுறை இப்படி செய்து வந்தால் முகம் பிரகாசமாகும்.

கேரள பெண்கள் ஏன் கொள்ளை அழகுடன் ஜொலிக்கிறார்கள் என்பதற்கு இதுவே காரணமாகும்.



## முகச்சுருக்கம் மாற

- ஆவாரம் பூ காய்ந்த பொடி - 5 கிராம், புதினா இலை காய்ந்த பொடி - 5 கிராம், கடலை மாவு - 5 கிராம், பயத்த மாவு - 5 கிராம் என்பவற்றை எடுத்து ஆலிவ் எண்ணெய் கலந்து நன்கு குழைத்து முகத்தில் பூசி 15 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவி வந்தால் முகச் சுருக்கம் நீங்கும். தொடர்ந்து 15 நாட்கள் செய்து வந்தால் என்றும் இளமைப்பொலிவுடன் இருக்கலாம்.
- வெள்ளரி - 2 துண்டு, நாட்டுத் தக்காளி - 1 பழம், புதினா - சிறிதளவு என்பவற்றை எடுத்து நன்றாக அரைத்து முகத்தில் பூசி குளித்து வந்தால் முகச் சுருக்கங்கள் நீங்கும். இதை காலை நேரத்தில் செய்வது நல்லது.

# மரவள்ளிக் கிழங்கு வடை



### தேவையான பொருட்கள்

மரவள்ளிக் கிழங்கு - 500 கிராம், மிள்காய்தூள் 1 - ஸ்பூன், வேர்க்கடலை பவுடர் - 50 கிராம், உப்பு - தேவையான அளவு, பெருங்காயப் பொடி - அரை ஸ்பூன், எண்ணெய் - 500 கிராம்

### செய்முறை

மரவள்ளிக் கிழங்கைத் தோலுரித்து கழுவிவிட்டு துருவிக் கொள்ளவும். அதில் மிளகாய்த் தூள், உப்பு, வேர்க்கடலை பொடி, பெருங்காயப் பொடி ஆகிய வற்றைக் கலந்து காய்ந்த எண்ணெய்யில் வடைகளாகத் தட்டிப்போட்டு வெந்தவுடன் திருப்பிப் போட்டு எடுக்கவும். தங்க நிறத்திற்கு வந்ததும் எடுக்கவும்.

# பெண்கள் கவனிக்க வேண்டியது

ஆனைநெருஞ்சில் இலை மூன்று எடுத்து, ஒரு டம்ளர் நீராகாரத்தில போட்டு, நல்லா கலக்கி கொஞ்ச நேரத்துல கொழகொழப்பா வரும். அதை அப்படியே கண்ணை மூடிக்கிட்டு காலையில வெறும் வயித்துல தொடர்ந்து மூன்று நாள் குடித்தால், வெள்ளைப்படுதல் வராது.

வேரோடு சேர்த்து, முழுசா ஒரு மணத்தக்காளி செடியை தண்ணி விட்டு அலசி, ஒரு லிட்டர் தண்ணியில போட்டு காய்ச்சி அரை லிட்டராக்கணும். அதை வெள்ளைப்படுதல் படுற இடத்துல ஊத்திக் கழுவினா நல்ல குணம் கிடைக்கும்.

### தாமதமான மாதவிடாய்க்கு

மாதவிடாய் சீரற்றவர்கள், பெருந்துத்தி இலை - 5 எடுத்து, அதோட மிளகு 5 சேர்த்து காலையில வெறும் வயித்துல மென்னு சாப்பிடணும். மூன்று முதல் ஐந்து நாள் சாப்பிடுதல் வேண்டும். அல்லது சதக்குப்பை 50 கிராம் எடுத்து, பொன்வறுவலா வறுத்து பொடியாக்கி, 3 பாகமாக்கி ஒரு பாகத்தை இரண்டாக பிரித்து, காலையிலயும், சாயங்காலமும் சாப்பிடணும். கூடவே, பனைவெல்லம் கொஞ்சம் சேர்த்துக்கணும். இப்பிடி மூணுநாள் சாப்பிட்டாலே வராத மாதவிடாய் வந்துடும்.




கருஞ்சீரகம் 25 கிராம் எடுத்து பொன் வறுவலா வறுத்து பொடியாக்கி, பனைவெல்லம் சேர்த்து காலையிலயும், சாயங்காலமும் சாப்பிட்டுவர மாதவிடாய்க் கோளாறு சரியாகும். அல்லது மாவிலிங்கப்பட்டையை அரைத்து நெல்லிக்காய் அளவு எடுத்து காலையில வெறும் வயித்துல சாப்பிடுவதும் நல்ல பலனைத் தரும்.

### சீரற்ற மாதவிடாய்க்கு

வல்லாரை இலை சூரணம் கால் ஸ்பூன் எடுத்து, நெய் விட்டு குழைத்து சாப்பிட்டுவர சீராகும். கல்யாண முருங்கை மாதவிடாய்க் கோளாறுக்கு கைகண்ட மருந்து. கல்யாண முருங்கை இலைச்சாறு 10 மில்லி எடுத்து, காலையில வெறும் வயித்துல குடித்துவருதலும் நல்ல மாற்றத்தைத் தரும்.

முற்றும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாணத் திட்டமிடல் கூட்டம்

கிழக்கு மாகாணத் திட்டமிடல் கூட்டம் கடந்த 04ம் திகதி கிழக்கு மாகாணத்தின் வரோதயநகர் கட்டிடத் தொகுதியில் நடைபெற்றுள்ளது.

கிழக்கு மாகாணத் தலைமைச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் உட்பட கிழக்கு மாவட்டங்களின் மாவட்டச் செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

2014ம் ஆண்டுக்கான வருடாந்த அமுலாக்கல் திட்டத்தை அவர்கள் விவாதித்துள்ளதுடன் கடந்த வருட அமுலாக்கல் திட்டத்தின் மீதான மீள்பார்வையையும் அவர்கள் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## துரிசில் வழுக்கி குடும்பத்தர் மரணம்



வாழைச்சேனை காவல்துறைப் பிரிவுக்குட்பட்ட கோரகல்லிமடு கிரான் பிரதேசத்தைச் சேர்ந்த சிவலிங்கம் செல்வராசா (வயது 32) என்பவர் துரிசியிலிருந்து சறுக்கி விழுந்து கடந்த 4ம் திகதி மரணமடைந்துள்ளார். இவர் துரிசியிலிருந்து சறுக்கி முறுத்தானை ஆற்றில் விழுந்து நீரில் மூழ்கியதாக காவல்துறையினர் கூறினர். மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் வயல் காவலுக்குச் சென்றுவிட்டு, சைக்கிளை தோளில் சுமந்துகொண்டு துரிசியின் மீது ஏறி நடந்து வந்துகொண்டிருந்தபோதே, இந்த அனர்த்தத்திற்குள்ளாகியுள்ளார்.

## அக்டட் நிறுவன உதவிகள்

(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)



ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் அக்டெட் நிறுவனத்தினால் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்காக நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் திட்டத்தின் ஒரு அங்கமாக மட்டக்களப்பில் மூன்று முயற்சியாளர்களுக்கு தலா ஒரு முச்சக்கர வண்டி வீதம் வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கடந்த (28) நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.எம்.சாள்ஸ் முயற்சியாளர்களுக்கான முச்சக்கர வண்டிகளை உத்தியோகபூர்வமாக கையளித்ததுடன், நிகழ்வில் மாவட்ட செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் சுதர்சன் மற்றும் அக்டெட் நிறுவனத்தின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.ஹஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஈழத்துத் திருச்செந்தூரில் 1008 சங்காபிசேகம்



சிவராத்திரி தினத்தன்று கிழக்கிலங்கையில் ஈழத்து திருச்செந்தூர் என அழைக்கப்படும் பழம்பெருமை வாய்ந்த கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் 1008 சங்காபிசேக பூஜை நிகழ்வினை தொடர்ந்து ஆலய குருக்கள் நிரோஷன் ஜீயின் தலைமையில் நடைபெற்ற அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளின் போது இடம்பெற்ற திருவிளையாடல் நாடகத்தின் ஒரு காட்சியை படங்களில் காணலாம்.

(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)

## மகிழுந்து (கார்) விபத்து

(கல்லடி நிருபர்)



மட்டக்களப்பு கல்முனை பிரதான மார்க்கத்தினூடாக கல்முனை நோக்கி பயணித்த தனியாருக்கு சொந்தமான மோட்டார் கார் களுவாஞ்சிக்குடி இலங்கை வங்கிக்கு அருகாமையில் வேக கட்டுப்பாட்டினை இழந்த நிலையில் விபத்துக்குள்ளாகி [illegible] யாரும் காணமடையவில்லை.

# சர்வதேசச் செய்திகள்

## பிரபலமான உக்ரேனிய வான்படை அதிகாரி



இரஸ்யப் படைகளாளால் கட்டுப் பாட்டுக்குள்கொண்டு வரப்பட்டுள்ள உக்ரேனின் வான்படை நிலையமொன்றின் தலைமை அதிகாரி கடந்த சில நாட்களில் உக்ரேனின் கதாநாயக அந்தஸ்த்துக்கு உயர்ந்துள்ளார்.

அவர், கேணல் யூலி மம்சர், கடந்த நாட்களில் பேராயுதங்களுடன் தனத வான்படத் தளத்தை கையகப்படுத்தியுள் இரஸ்யப் படைகளுக்கு எதிராகத் தனிய அவ்வான் படைத்தளத்திற்குள் பிரவேசி இரஸ்ய ஊடுறுப்பை கடுமைய எதிர்க்குள்ளார்.

## பிறந்த குழந்தை எச்.ஐ.வி தொற்றில் இருந்து பாதுகாக்கப்பட்டது



பிறந்த குழந்தைக்கு உடனடியாக ஆரம்பிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சையனி மூலம் எச்.ஐ.வி தொற்றில் இருந்து அக்குழந்தை காப்பாற்றப்பட்டுள்ளது.

இத்தகவலை அமெரிக்க லொஸ் ஏஞ்சல்ஸ் வைத்தியவர்கள் வெளியிட்டதும் உலகெங்கும் எச்.ஐ.வி வைரஸ் குணமாக்குவதற்கான நம்பிக்கைகள் பலமடையத் தொடங்கியுள்ளன. இவ்வாறு எச்ஜவி தொற்றில் இருந்து இரண்டாவது குழந்தை காப்பாற்றப்பட்டுள்ளது என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

எயிட்ஸ் நோய்க்குள்ளாகியுள்ள தாயொருவர் பிரசவித்த குழந்தைக்கு மேற்கொள்ளப்பட்ட உடனடி மருத்துவ சிகிச்சை இதனைச் சாத்தியமாக்கியுள்ளது என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

## வடகொரியாவின் ஆட்டிலறி வீச்சில் மயிரிழையில் தப்பியது சீன விமானம்

வடகொரியா ஆட்லறிப் பயிற்சியில் ஈடுபட்டுள்ள போது அருகில் பறந்த சீன விமானமொன்று மயிரிழையில் தப்பியதாகத் தென்கொரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

சீனாவின் விமானமொன்று 202 பயணிகளுடன் விமான தளத்தில் இருந்து மேலெழும்பிய கணத்தில் வடகொரியாவின் ஆட்டிலறிகள் பயிற்சிக்காகச் சுடப்பட்டுள்ளன.

பலகுழல் பீரங்கித்தாக்குதல் பயிற்சிகளில் நாம் தொடர்ந்து ஈடுபட்டுள்ளோம். அப் பிரதேசத்தில் வான் பறப்பு இருக்கின்றதென்றால் அதனைச் சர்வதேச வான்பறப்புக் கழகம் எமக்கு அறியத்தந்திருக்க வேண்டும். எவ்வாறெனினும் விமானம் பறந்து 10 நிமிடங்களின் பின்னரே அவ்விமானம் பறந்த உயரத்தை விட இருமடங்கு உயரத்தை நோக்கி எமது சூட்டுப் பயிற்சி அமைந்திருந்தது என வடகொரிய அலுவலர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

## இராணுவ நிதி ஒதுக்கீட்டை 12% உயர்த்தியது சீனா



நடப்பு ஆண்டுக்கான இராணுவ நிதியினைப் பன்னிரெண்டு சதவீதத்தினால் சீனா உயர்த்தி உலக நாடுகளுக்கு மற்றுமோர் அதிர்ச்சி வைத்தியத்தை அளித்துள்ளது.

79 பில்லியன் ஐக்கிய இராச்சியப் பவுண்களை எட்டியுள்ளது சீனாவின் பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு.

சீனாவின் இறையாண்மையையும், பாதுகாப்பையும் பலப்படுத்திக்கொள்வதுடன் சீனாவின் விருத்தியடைந்துவரும் அக்கறைகளையும் அடைந்து கொள்ளத் தக்கவகையில் சீன மக்கள் விடுதலை இராணுவத்தை பலம் மிக்கதாக்குவது இன்றியமையாதது என சீனப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சீனாவின் வீரத்தியடைந்துவரும் அக்கறைகள் எவை என்பதையிட்டு அமெரிக்காவும் சீனாவின் அண்டை நாடுகளும் கருத்திற் கொள்ளத் தொடங்கியுள்ளன. ஏற்கனவே கடல் எல்லைகளை மீளமைக்க முயலும் சீனாவிற்கும் அதன் அண்டை நாடுகளுக்கும் இடையே கடுமையான முரண்பாடுகள் உருவாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரை ஏமாற்றினாரா சுமந்திரன்?



வடமாகாண சபையில் போர்குற்ற விசாரணையை சர்வதேச சமூகத்தின் மேற்பார்வையில் இலங்கையில் நடாத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கும் இவ் வேளையில் ஜெனீவாவிற்குப் பயணம் செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவ்விடயம் தொடர்பாக சர்வதேசத்தின் மீது எவ்வித அழுத்தத்தையும் பிரயோகிக்கவில்லை என்பதுடன் அதனை ஒரு கோரிக்கையாகவும் முன்வைக்கவிலலை என அவருடன் ஜெனீவா நோக்கிப் பயணித்த அனந்தி சசிதரன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் ஜெனீவாவிற்கு சென்ற தன்னை அங்கு வைத்து பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் எந்தவொரு சந்திப்பிலும் ஏதும் பேச அனுமதிக்கவில்லை எனவும் அவரும் சர்வதேச போர்க்குற்ற விசாரணை தொடர்பில் அங்கு எந்த கோரிக்கைகளை முன்வைக்கவில்லை....

13

# சர்வதேச விசாரணை



## தேவை

பேராயர் டெஸ்மண்ட் டுடு

## தேவையில்லை

பேராயர் மல்கம் ரஞ்சித்



இலங்கையில், இறுதிப்போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று தென்னாபிரிக்காவின் பேராயர் டெஸ்மன் டுட்டு கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு அவர் உட்பட்ட.....

13

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தை உருவாக்குவேன்

## - உபவேந்தர் சபதம் -

(வரதன்)



துணைவேந்தர் கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜா

எனது பதவிக்காலத்தில் கிழக்கு பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தினை உருவாக்குவேன். இதே போன்று கிழக்கு பல்கலைக் கழகத்தில் கலை,கலாசார பீடத்துக்கு இதுவரையில் தனிக்கட்டிடம் எதுவும் இல்லாத நிலையே இருந்து வந்தது.எனினும் தற்போது அதற்கான தனிக்கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப் பட்டுவருகின்றது. 35பேருக்கு பதவி உயர்வுகள் வழங்கப் பட்டுள்ளன. கிழக்கு பல்கலைக்கழகத்தின் நான்கு வளாகங்களில் 17 பட்டப்படிப்புகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. புதிய துறைகள் ஏழு ஆரம்பிக்கப் பட்டுள்ளன. கிழக்கு பல்கலைக் கழகத்தின் இந்துநாகரிக பீடம் தனித்துறையாக மாற்றப் பட்டுள்ளது. அதற்கான அனுமதியை உயர்கல்வி அமைச்சு வழங்கியுள்ளது என அபிவிருத்திப் பாதையில் பயணிக்கும் கிழக்குப் பல்கலைக்கழகம் தொடர்பாக துணைவேந்தர் கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜா தெரிவித்தார். கிழக்கு.......

13

# மாணவர் கொலை வழக்கின் சந்தேகநபர்கள் மூவர் வழக்கிற்கு வரவில்லை

திருகோணமலை கடற்கரைப் பகுதியில் 1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி நடந்த 5 மாணவர்களின் கொலை தொடர்பான வழக்கு கடந்த 06ம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பிணையில் உள்ள மூன்று சந்தேக நபர்கள் நீதிமன்றுக்கு வருகை தரவில்லை.

திருகோணமலை பிரதான நீதவான் ஈ. சரவணராஜா முன்னிலையில், வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, முதலாம், ஏழாம் மற்றும் 13வது சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை என்பதால், அவர்களுக்கு பிடிவிராந்தை பிறப்பிக்குமாறு பாதிக்கப்பட்ட தரப்பின் ......

13

# மக்களைத் திரட்டிப் போராடுவோம்

## அரியம் எம்பி எச்சரிக்கை



மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புளுக்குனாவ மற்றும் கெவிலியாமடு ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்ட விரோத குடியேற்றங்களுக்கு சட்ட ரீதியான அனுமதியினை யாரும் வழங்க முற்பட்டால் அவர்களுக்கு எதிராகவும் இந்த குடியேற்றங்களை.....

13

# பசுஷில் திருகோணமலையில்



பொருளாதார அபிவிருத்திப் பிரதியமைச்சர் பஷில் ராசபக்ச அவர்கள் எதிர்வரும் 11ம் திகதி திருகோணமலைக்கு வருகை தரவுள்ளதாக பிரதேசச் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிங்கள் மகாவித்தியாலயத்திற்கு வருகை தரும் அவர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ள திட்டங்கள் சிலவற்றைப் பார்வையிடப் போவதாகவும் அவை தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் சந்திப்புக்களை நிகழ்த்தவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. அத்தினத்தில் வங்கியொன்றின் பிராந்தியக் காரியலயமொன்றையும் அவர் திறந்து வைப்பார் என எதிர்பாக்கப்படுகின்றது.

# பத்திரகாளியம்பாள் ஆலய மகோற்சவம் ஆரம்பம்



திருகோணமலை பத்திரகாளியம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 7ம் திகதி ஆரம்பமாகியுள்ளது. 16ம் திகதி தேர் திருவிஙாவும் 17ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

17ம் திகதி மாதுமையம்பாள் சமேத கோணேஸ்வரப் பெருமானின் கொடியேற்றம் நிகழவுள்ளது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org